பாபு தையல் இயந்திரம்
திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி
நகைமாடம்


T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -353

# ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் தொடர்புடைய முஸ்லீம் தீவிரவாதிகளின் முக்கிய புள்ளிகள் தலைமறைவு



# ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடியவர்கள்

## தமிழீழ விடுதலைப்புலிகள் – தலிபான்களுடன் ஒப்பிடுவது தவறு



# இலங்கையில் தலைவிரித்தாடும் டெல்டா!



# ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் தொடர்புடைய முஸ்லீம் தீவிரவாதிகளின் முக்கிய புள்ளிகள் தலைமறைவு



இலங்கையில் கொவிட் வைரசின் தாக்கம் ஒருபுறமிருந்தாலும் மற்றொரு பேசுபொருளாக ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சம்பவம் அமைந்துள்ளது. உதித்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டுவிட்டனர் அல்லது கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதே பொலிஸ் மா அதிபர் சி.டி விக்ரமரத்ன அவர்களின் கருத்தாகும். இத்தாக்குதலுடன் தொடர்புடைய குழுவினர் பத்தாயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டு எதிர்காலத் தாக்குதலுக்காக மறைக்கப்பட்டிருந்த வெடி பொருட்களும் பெருமளவில் மீட்கப்பட்டன. இவர்களுடன் தொடர்புடையவர்கள் இன்னமும் தேடப்பட்டு வருகின்றார்கள். எனினும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் பலவும் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. இனி இந்த நாட்டில் முஸ்லீம் தீவிரவாதிகளினால் ஒரு யுத்தம் அல்லது தீவிரவாதத் தாக்குதல் இடம்பெறமாட்டாது என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன் எனக் கூறியுள்ள பொலிஸ் மா அதிபர், முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களையும், அவரது சகோதரரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருப்பதானது இன்னமும் இந்நாட்டில் இத் தாக்குதலுடன் தொடர்புபட்ட விசாரணைகள் முழுமைபெறவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

குறிப்பாக முன்னாள் அமைச்சர் றிசாட் அவர்களது கைது, ஒரு அரசியல் பழிவாங்கல் என்று கூறப்படுகின்றது. உண்மையும் கூட. அடிப்படை முஸ்லீம் தீவிரவாதப் போக்குடையவர்களே இவ்வாறு செயற்பட்டார்கள். அதற்காக அனைத்து முஸ்லீம் தரப்பினரையும் குறை கூறுவது அல்லது அவர்களை அரசியல் ரீதியாகப் பழிவாங்குவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததொன்று. ஆனாலும் இந்த தீவிரவாதத் தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமையினைப் பார்க்கின்றபோது, தேவாலயத்திற்குள் நடத்தப்பட்ட இத்தாக்குதல் என்பது முஸ்லீம் அடிப்படைத் தீவிரவாதிகளுடைய மனிதாபிமானமற்ற செயற்பாடேயாகும்.

அப்போது முஸ்லீம் தரப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவிருந்து அமைச்சுப் பதவி வகித்தவர்களது பதவி பறிக்கப்பட்டது மட்டுமன்றி, தற்போது ஒரேயொரு நீதியமைச்சைத் தவிர எந்தவொரு அமைச்சுப் பதவிகளும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதற்கான வெளிப்படையான காரணங்களையும் அரசு அறிவிக்கவில்லை. தற்போது முஸ்லீம் அரசியல் தலைமைகளைப் பகைத்துக்கொண்டுள்ளமை என்பது நாட்டில் பொருளாதார ரீதியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருப்பதாக ஆளுந் தரப்பு கூறுகின்றது.

இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதற்காக குறித்த நாட்டுக்குள்ளேயே தீவிரவாதப் போக்கையுடைய முஸ்லீம் தரப்பொன்றை உருவாக்கி அவர்களை பலமான ஒரு அமைப்பாக கொண்டு வந்தது அப்போதிருந்த ஆட்சியாளர்களே. இலங்கையில் புலனாய்வு மற்றும் இராணுவக் கட்டமைப்பிலும் முஸ்லீம் தரப்பினர் கடமையாற்றுகின்றனர். முஸ்லீம் இனத்திற்கு எதிராக இவர்கள் செயற்படுகின்றபோது அந்த இனம் சார்ந்த உயர் அதிகாரிகள் இதய சுத்தியுடன் அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படுவார்கள் என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஒரு முரணான விடயம்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் காலத்தின்போது நல்லாட்சிக்குத் தலைமை தாங்கிய மைத்திரிபால சிறிசேன அவர்களே அப்போது பொறுப்புக்கூறியிருக்க வேண்டும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் கொரோனா வைரசின் தாக்கத்தை எதிர்கொள்வதா? அல்லது ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவதா?, இதற்கு சட்டம் எந்த அளவிற்கு செயற்படும். இதனுடன் தொடர்புடைய உயர் அதிகாரிகள் மற்றும் அரச தரப்பு சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு தண்டனையை வழங்க அரசு ஏன் இன்னமும் தயங்குகின்றது என்கின்ற கேள்விகளும் தற்போது வினவப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் மாகாண சபைத் தேர்தலையும் வெகுவிரைவில் நடத்தவேண்டும் என்கின்ற அரசின் போக்கு தற்போது கொரோனா வைரசின் காரணமாக திசை மாறிப்போயுள்ள இக்காலகட்டத்தில், அரசு பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில், சீனாவின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ள நிலையில், அடுத்தகட்டம் என்ன என்பது பற்றி தற்போது இருக்கக்கூடிய அரசாங்கத்தினால் சரியாக தீர்மானிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இதற்கிடையில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரிகள் அதனுடன் தொடர்புடைய முஸ்லீம் அரசியல்வாதிகள் இன்னமும் மறைமுகமாக அரசிற்கு ஆதரவினை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லீம் தீவிரவாதத்தை ஒரு நிலைக்குக்கொண்டு வந்த மஹிந்த தரப்பு அந்த மக்களை ஒரு அடக்குகின்ற நிலைமையினை இந்த மண்ணில் தற்போது தோற்றுவித்துள்ளது எனலாம். கிழக்கு மாகாணத்தில் செரிந்து வாழ்கின்ற முஸ்லீம்களில், இந்த அடிப்படைத் தீவிரவாதத்தைக் கடைப் பிடிக்கும் தரப்பினர், தமது இஸ்லாமிய தீவிரவாதத்தை இந்நாட்டுக்குள் வளர்த்தெடுக்கலாம் என்கின்ற ஒரு உத்வேகத்துடன் அல்லது தனியலகு தமக்காக உருவாக்கித்தரவேண்டும் என்கின்ற உத்வேகத்துடன் சஹ்ரான் குழுவின் ஆதரவுடன் தற்போதும் செயற்பட்டு வரலாம். ஆனாலும் அதனுடைய தாக்கம் என்பது ஒரு அரசாங்கத்தின் சரிவு ஏற்படுகின்ற போதே வெளிப்படும்.

கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தனது ஆட்சியினைத் தக்கவைத்துக்கொண்டாலும் சிங்களப் பெரும்பான்மையினர் இவ் ஆட்சியி னை வீழ்த்தவேண்டும் என்பதிலும் தற்போது ஆர்வமாக செயற்படுகின்றனர். அதிலும் மிக முக்கியமாக பொருளாதார நெருக்கடியே காரணமாகவிருக்கிறது. இந்த தருணத்தில் தான் முஸ்லீம் செல்வந்தர்களது ஆதரவு அரசிற்குத் தேவைப்படுகிறது. வர்த்தக வணிக கைத்தொழில் அமைச்சராக முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்கள் இருந்த போது இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினை வழங்கி, முன்னேற்றப் பாதையில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெற உறுதுணையாக இருந்தவர்கள். தற்போது பொருளாதார நெருக்கடிகளிலும் குறித்த ஆடைத்தொழிற்சாலைகளின் மூலமாகவும், சுற்றுத்துறையினாலும்தான் ஓரளவுவருமானம் இலங்கைக்குக் கிடைக்கிறது. இதனையும் இக்காலகட்டத்தில் இழுத்து மூடினால் இலங்கை பொருளாதார ரீதியாக பாரிய சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை வரும். ஆடைத் தொழிற்சாலைக்கு என புதிய சட்டம் இயற்றப்பட்டு கொவிட் காலத்தில் அது தனி சிறப்புடன் இயங்கிவருகின்றது. அரபு நாடுகளுடன் முன்னாள் அமைச்சர் றிசாட் அவர்கள் நட்புறவினைப் பேணியவர் என்கிற வகையில் குறிப்பாக எரிபொருள் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வந்தது. தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களும் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றன. நாளுக்கு நாள் சந்தையின் விலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. இந்த சூழலில் உற்பத்தியை அதிகரிப்பதற்குப் போதிய மூலதனம் இல்லாமையினால் இலங்கையரசினுடைய ஏற்றுமதி தடைப்பட்டுள்ளது.

ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியதன் விளைவு இன்று இலங்கை அரசு அதனை அறுவடை செய்கிறது. வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை அரசாங்கம் அரசியல் ரீதியாக வழங்கவேண்டிய சூழல் தற்போது நிலவி வருகின்றது. விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல என பல உலக நாடுகள் தற்போது அங்கீகரித்துள்ளன. இவ்வாறான சூழலில் பூகோள ரீதியிலான அரசியல் இலங்கையில் ஒரு முஸ்லீம் தீவிரவாதக் குழுவினை உருவாக்கி முஸ்லீம் இனத்தை ஓரங்கட்டுகின்ற நிலைமை இந் நாட்டில் உருவாக்கப்படலாம். ஆரம்பத்திலேயே சஹ்ரான் போன்றவர்களினால் இலங்கையில் தாக்குதல் நடைபெறப்போகிறது என்கிற எச்சரிக்கையினை இந்தியா வழங்கியிருந்தது. அதனை அலட்சியமாக எடுத்துக்கொண்ட அப்போதைய இலங்கையின் அரசு, பாரிய தவறொன்றினை விட்டுவிட்டார்கள். குறிப்பாக ஆட்சியிலிருந்த மைத்திரிபால சிறிசேன அவர்கள் இத்தாக்குதலின் போது தனக்கான பதில் ஜனாதிபதியினை நியமிக்காது சிங்கப்பூர் சென்றமையானது அவர் மீது சந்தேகத்தை வலுப்படுத்தி இருந்தது. தற்போது அவரும் விசாரணைகளுக்காக சென்று வருகிறார்.

பொலிஸ் உயர் அதிகாரிகளும் இத்தாக்குதல் தொடர்பில் கவனம் செலுத்தாததன் காரணத்தினால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெறுகிறது. எந்தவொரு நாடுகளிலும் இடம்பெறுகின்ற முஸ்லீம் தீவிரவாதம் என்பது மதவாத இனவாத அடிப்படையினைக் கொண்டே ஆரம்பிக்கப்படுகின்றது. இதில் தமிழீழ விடுதலைப்புலிகளது போராட்டம் மட்டுமே ஒரு இனத்தின் விடுதலைக்கானப் போராட்டமாக அமையப்பெற்றது.

குறிப்பாக ஈரான், ஈரான், துருக்கி, லிபியா போன்ற நாடுகளில் அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்ட யுத்தங்கள் தீவிரவாதத்திற்கு எதிரானதல்ல. அது ஒரு நாட்டினுடைய வளங்களைச் சுரண்டுவதற்கான நீண்டகாலத் திட்டங்களே. அதனை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு இந்த இஸ்லாமியத் தீவிரவாதிகள் தமது மதம் சார்ந்த தீவிரவாதத்தை மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றனர். மதத்தின் பெயரால் போர் என்பது உலக வரலாற்றில் பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அதுபோல் இலங்கையின் ஈஸ்டர் தாக்குதலும் மதவாதத்தை அடிப்படையாகக் கொண்டதே.

தற்போது சஹ்ரானது குண்டுத்தாக்குதல் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள், அதனுடன் தொடர்புடையவர்கள் பற்றி அறிந்தவர்கள் எமக்கு அறியத்தர வேண்டும் என்று இலங்கையின் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன பகிரங்க அழைப்பொன்றினை விடுத்துள்ளார். இத்தாக்குதல் தொடர்பில் உறுதியான ஆதாரங்கள் இருந்தால் பொலிஸ் திணைக் களத்தில் முறைப்பாடு செய்ய முடியும் என்றும் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இது வரையில் 46 பேருக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளது. 2019 ஏப்ரல் 21 அன்று நடத்தப்பட்ட இத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் இரகசியத் தன்மையுடன் பாதுகாக்கப்படும் என்பதும் போதிய ஆதாரங்கள் இருந்தால் மாத்திரம் இவர்களுக்கான தண்டனைகளை வழங்க முடியும் என்றும் போதிய ஆதாரங்கள் இல்லாமையினால் முழுமையான விபரங்களைக் கூற முடியவில்லை என்றும், இத்தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட பத்தாயிரம் பேரில் 311 பேர் இன்னமும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள். இத்தாக்குதல் தொடர்பிலான விசாரணைகள் குறித்து போதிய தெளிவின்மையினால் சமூகத்தில் தவறான அபிப்பிராயம் நிலவுகின்றது.

சந்தேக நபர்கள் மேற்கொண்ட தொலை பேசி உரையாடல்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம் அழைப்பாகும். இத்தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட புத்திஜீவிகள் பலரும் இருக்கின்றனர். இது தொடர்பாக பெரும் எண்ணிக்கையிலான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டிருக்கிறது. சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர் நடத்திய குண்டுத்தாக்குதல் குறிப்பிட்ட திட்டமிடலுடன் நடத்தப்பட்டவை அல்ல. இதற்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் ஆதரவு வழங்கியவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பது தற்போது இனங்காணப்பட்டுள்ளது. தராதரம் பார்த்து நாட்டின் சட்டத்திற்கமைவாக இவ்வாறானவர்களுக்கு தண்டனைகள் வழங்க முடியாது. இவ்வாறான சம்பவங்களை இனிவரும் கலங்களில் தவிர்க்கப்படவேண்டுமாகவிருந்தால் அடிப்படையில் இருந்து ஆராயப்படவேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணைகளின் ஆரம்பத்தில் ஏற்பட்ட நிர்வாகக் குறைபாடுகளும் பொறுப்பற்ற விசாரணைகளும் பதிவாகியிருக்கின்றன. விசாரணைகள் ஆழமாக மேற்கொள்ளப்படாமல் குறுகிய காலத்தில் அவற்றை நிறைவு செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான ஒரு விசாரணை குழு அமைக்கப்பட்டிருந்தது. அந்த விசாரணைக் குழுவும் சரியான அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை. பக்க சார்பான விசாரணைகளை கொண்டிருந்தமையினால் குற்றவாளிகளை இனங்கண்டு தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாத சூழல் உருவாக்கப்பட்டது. இன்றைய கால சூழ்நிலையில் கொரோனாவினைப் பயன்படுத்தி பல்வேறு நாடுகளிலும் மாற்றங்கள் உருவாகி வருகின்றது. அதனுடன் ஒன்றுதான் நாடுகளில் ஏற்பட்டுள்ள தீவிரவாதமும் அதனது செயற்பாடுகளும்.

இந்நிலையில், இலங்கையின் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் திருப்தி காண முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்தவொரு சூழலில் முஸ்லிம் அரசியல் தலைமைகளைப் பகைத்துக்கொண்டு அரசியல் செய்ய முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டதன் அடுத்தக்கட்ட நடவடிக்கையாவே, அரசாங்கம் தற்போது அதனை மீள்விசாரணை செய்து, கொவிட் தாக்கத்தில் இருந்து மீள்வதற்கும், பொருளாதார ரீதியாக நாட்டை கட்டியெழுப்புவதற்கும், அரசியல் ரீதியாக பலமாக செயற்படுவதற்குமான மற்றொரு தந்திரோபாயத்தை கோட்டபாய ராஜபக்சவின் அரசு மேற்கொள்கிறது எனலாம்.

**-இரணியன்-**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## இலங்கையரசின் செயற்பாடுகளால் அதிருப்தியில் நாட்டு மக்கள்

இலங்கையை தற்போது ஆட்சி செய்து வரும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசு, இன்று நாட்டு மக்களினால் அதிகமாக விமர்சிக்கும் அரசாக மாறிவருகிறது. இந்த அரசை ஆட்சிக்கு கொண்டுவந்த பெரும்பான்மை சிங்களவர்களே இந்த அரசின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவும், ஆட்சி மாற்றம் குறித்தும் சிந்திக்கத் தொடங்கி விட்டனர். அரசின் செயற்பாடுகளால் அதிருப்தியுறும் நிலைக்கு நாட்டு மக்கள் வந்துள்ளனர் என்பதே உண்மை.

பதவிக்கு வந்து இரு வருடங்கள் கூடப் பூர்த்தியாகவில்லை அதற்குள் பௌத்த பிக்குகளும், அரசியல் சார் நிபுணர்களும் ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்தும், அவர் பதவிகளில் நியமிக்கும் உறுப்பினர்கள் குறித்தும் கேள்விகள் கேட்கப்படுகின்றது. பௌத்த பிக்குகள் வீதிகளுக்கு இறங்கியுள்ளனர். ஆட்சிமாற்றம் குறித்தும் கதைக்க ஆரம்பித்துள்ளனர்.

இன்று உலக நாடுகளே கோவிட் தொற்றால் நிலைகுலைந்துபோயுள்ள நிலையில், டெல்டா பிறழ்வினால் இலங்கை முற்றாகப் பாதிக்கப் பட்டுள்ளது. ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்ட இராணுவத் தளபதி சவேந்திர டி சில்வா தலைமையிலான கோவிட் ஒழிப்பு செயலணி செயழிலந்துவிட்டதாக பாராளுமன்றிலும் குரல்கள் ஒலிக்க ஆரம்பித்துள்ளன. கோவிட் ஒழிப்பு செயற்பாடுகளும் திருப்தியாக இல்லை. முதலாம் மற்றும் இரண்டாம் அலையின் போது நாட்டை முடக்கி கட்டுப்படுத்திய இலங்கை அரசு, பின்னர் கோட்டை விட்டதன் விளைவே இன்று கிராமம் முழுவதும் கொவிட் பரவ காரணமாக அமைந்துள்ளது. சரியான திட்ட மிடப்பட்ட செயற்பாடுகள் இல்லாமையின் இதற்குக் காரணம். நாட்டிற்குத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் அரசு தடுமாற ஆரம்பித்துள்ளது. மக்களின் பக்கமே தற்போது கையைக் காட்டியுள்ளது. நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்கிறது.

துறைசார்ந்த நபரை சுகாதார அமைச்சராக நியமிக்காது தான் நினைத்ததுபோல ஒருவரை நியமித்ததன் விளைவு பாரதூரமாக மாறியுள்ளது. தற்போது அமைச்சரவையில் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளது. இன்று மாணவர்களின் கல்வியும் கேள்விக்குறியாகியுள்ளது. அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்தும் கற்றல் செயற்பாடுகளில் இருந்து விலகியுள்ளனர். அரசுடனான பேச்சுவார்த்தையில் அவர்களுக்கும் சுமுகமான தீர்வுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. மருத்துவத் துறையினரும் அரசைக் குற்றஞ்சாட்டும் அளவிற்கு நாட்டின் நிலைமைகள் மோசமடைந்துள்ளது. தற்போதைய தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தல் கூட மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தால் தான் நடந்துள்ளது என்கிற விடயம் அரசை மக்கள் திட்டித்தீர்க்கும் நிலையை உருவாக்கியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பினால் மக்கள் இன்னல்களுக்கு முகங்கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

எனவே நாட்டு மக்களைப் பாதிக்காத வகையில் ஒரு ஜனநாயக நாட்டின் அரசியல் செயற்பாடுகள் திட்டமிட்டு நடைபெறவேண்டும். துறைசார்ந்தவர்கள் உரிய பொறுப்புக்களுக்காக கொண்டு வரப்படவேண்டும். நாட்டை முடக்குவதால் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடையும் என்பது இன்று பொய்யாகிப் போயுள்ளது என்பதை நினைவிற்கொண்டு, அனைவரையும் இணைத்து ஒரு சிறந்த குழுவை உருவாக்கி கிராமம் தோறும் கோவிட் ஒழிப்பு செயலணி செயற்படவேண்டும். அப்போதுதான் சிறந்த பெறுபேற்றை மிக விரைவில் நாம் பெறக்கூடியதாகவிருக்கும்.

# 157 உலக வரலாற்றில் குறுஞ்சமர்

### ஆப்கானிஸ்தான் கெரில்லாக்களது செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பும் தந்திரோபாயமும்



வரலாறு கூறுவதன் பிரகாரம், ஆப்கானிஸ்தானியர்களின் சுதந்திரப்பிரியர்கள், தமது மத மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்குத் தீவிரமாகத் தம்மை அர்ப்பணித்துள்ளவர்கள். கடவுளைக் கொண்டிராத கம்யூனிஸ்டுக்களுடன் சமரிடத் தள்ளப்பட்ட ஒவ்வொரு முஜாகுதீனுக்கும் (கடவுளின் வீரர்கள்) சொர்க்கத்தில் இடமொன்று தயாராக இருக்கின்றதென அவர்கள் நம்பி னார்கள். இதுதவிர, சகல ஆப்கானியர்களும் சமரில் பங்கெடுப்பது தமது ஆண்மையை வெளிப்படுத்துவதற்குச் சிறந்ததொரு சந்தர்ப்பமாகவும் தனது சகாக்கள் மத்தியில் பிரபல்யத்தைப் (உயர்ந்த மனிதன்) பெறுவதற்குமானதொரு சந்தர்ப்பமாகவும் கருதினார்கள்.

அத்துடன், ஆப்கானியக் கெரில்லாக்கள் படையைப்போல ஆப்கானிய சமூகமும் இன ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் பிரிந்திருந்தது. வெவ்வேறு எதிர்ப் புரட்சிக் குழுக்கள் பல தடவை மேற்கொண்ட ஒன்றுசேர்வதற்கான முயற்சிகள் அவர்களை இருபெரும் பிரதான குழுக்களாகப் பிரிவடைந்திருப்பதைத் தடுக்க முடியவில்லை. இஸ்லாமிய அடிப் படைவாதிகள், மிதவாதத் தேசியவாதிகள் ஆகிய இரண்டுமே அவையாகும். இக்குழுக்களில் முதலாவது குழுவில் மிக முக்கிய பங்கை மூன்று கட்சிகள் கொண்டிருந்தன. கெக்மத்தியாரின் தலைமையில் கெஸ்ப்-,இஸ்லாமி ஒரே பெயரைக் கொண்ட கலேசின் தலைமையிலான கட்சி, ரபானின் தலைமையில் ஜமியாத்-,-இஸ்லாமி (இக்கட்சி பிரதானமாக தஜிக்குகள் மத்தியில் பிரபல்யமானதாக இருந்ததுடன், தனது களமுனைக் கட்டளையாளர்களின் உயர் நிபுணத்துவத்தால் ஏனையவற்றை விட வேறுபட்டதாகவும் இருந்தது) ஆகியனவே அவையாகும்.

இஸ்லாமிய பழமைவாதிகளைவிட மிதவாதத் தேசியவாதிகள் தரப்பிலுள்ளோர் கூடுதலாக இருந்தனர். இவர்களதும் குழுக்களில் மூன்று கட்சிகள் மிகக்கூடிய ஆதிக்கத்தைக் கொண்டிருந்தன. இஸ்லாமியத் தேசிய முன்னணி (தலைவன் - கைலானி), கரக்காத்-,-என்கெலாப்-,-இஸ்லாமி (தலைவன்-மெ.கம்மதி), ஜாப்கா-நேயத்-,-மெல்லி (தலைவன்-மொட்ஜாடாடி) ஆகிய கட்சிகளே அவையாகும்.

மேலே குறித்த இரண்டு குழுக்களும் சுன்னி முஸ்லிம்களை ஒன்றுதிரட்டியது. ஆனால், 10-15% ஆப்கானிய சனத்தொகை சியா முஸ்லிம்களைக் கொண்டதாகும். இவர்கள் கூடுதலாக மத்திய, மேற்கத்தேய மாகாணங்களில் வசித்து வந்தார்கள். அவர்களிடத்தில் அவர்களுக்குச் சொந்தமான கட்சிகள் இருந்தன. அவை ஈரான் புரட்சித் தலைவர் அயத்தொல்லா கொமேனியின் கொள்கைகளைப் பின்பற்ற முயற்சித்தன. ஆப்கானிஸ்தான் சுன்னி முஸ்லிம் பெரும்பான்மை ஈரானியத் தீர்க்கதரிசியின் போதனைகளைத் தீவிரமாக எதிர்த்தது.

அங்கு என்னவாக இருந்தாலும், மேலே குறிப்பிட்ட கட்சிகளும் குழுக்களும் ஆப்கான் எதிர்ப்பியக்கப் படைகளைப் பாகிஸ்தான், சீனா, ஈரான் போன்ற நாடுகளிலும் ஏனைய பல நாடுகளிலும் கொண்டிருந்தன. கெரில்லாக்களுக்கு, ஆயுதங்களும் உப காரணங்களும் விநியோகிக்கப்படும் பிரதான வழியாகப் பாகிஸ்தான் விளங்கியது. அங்கேதான் கூடுதலான பயிற்சித் தயார்ப்படுத்தல் தளங்களும் அமைந்திருந்தன.

ஆகவேதான், தனியான படைப்பிரிவுகள் ஒவ்வொன்றினதும் சமர்ச் சாத்தியப்பாடுகள், அக்கட்சிகள் ஒத்த உறவைக் கொண்டிருக்கின்ற நாட்டின் அதிகாரத்தரப்பினது பண்புக்கேற்ப ஒன்றுக்கொன்று கூடுதல் வித்தியாசத்தைக் கொண்டிருந்தன.

ஆப்கானிஸ்தானிய எதிர்ப்பியக்கத்தில் உண்மையான வலிமையை களக் கட்டளையாளர்கள் கொண்டிருந்தார்கள். இவர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் பெற்றவர்களாக நான்கு பேர் இருந்தார்கள். தஜிக் இனத்தைச் சேர்ந்த அக்மட் சா மசூட், நாட்டின் வடகிழக்கில் பான்ட்ஜேர் பள்ளத் தாக்கில் ஒன்றிணைந்த படைப்பிரிவுகளின் கட்டளையாளனாக இருந்தான். வடக்கிலும் வடமேற்கிலும் அரச இராணுவத்தின் முன்னைநாள் கப்டனான உஸ்பெக் இனத்தைச் சேர்ந்த இஸ்மாயில் கான் ஆதிக்கம் செலுத்தினான். காபூலிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் அப்துல் காக்கின் நகரக் கெரில்லாக்கள் பிரசித்தி பெற்றிருந்தார்கள். தெற்கிலும் தென்மேற்கிலும் கெரில்லாக்களின் ஒன்றிணைந்த படைகளை அமீன் வர் தாக் வழிநடத்தினான். மேலே விவரித்தவற்றைத் தவிர, ஆப்கானிஸ்தானில் இன்னமும் கிட்டத்தட்ட 200 - 250 வரையான பிரதேசக் கட்டளையாளர்கள், எவரிலும் தங்கியிருக்காமல் தமது பெரும்பான்மையுடன் செயற்பட்டுள்ளார்கள். வெவ்வேறு காலப்பகுதிகளில் ஆப்கான் எதிர்ப்பியக்க வீரர்களின் மொத்த எண்ணிக்கை 120000இலிருந்து 200000 கூடிக்குறைந்த வாறு இருந்தது.

ஆரம்பத்தில் (1979-1981ஆண்டுக் காலப்பகுதிகளில்) கெரில்லாக்களின் ஆயுதங்கள் பிரதானமாக, ரசியா, பிரித்தானியா, ஜேர்மனி போன்றவற்றின் 1914 - 1918 காலப் பகுதிகளில் உலகப் போரில் இடையிடையே பயன்படுத்திய பழைய சுரிசுடுகலன்களாக இருந்தன. அத்துடன், அவர்கள் வேட்டைச் சுடுகலன்களையும் கொண்டிருந்தார்கள். பின்வந்த காலங்களில், எகிப்திலிருந்தும் சீனாவிலிருந்தும் விநியோகம், அரச படைகள் கெரில்லாப் படைப்பிரிவுகளின் பக்கங்களுக்குச் சென்றமை, சமர்க்களத்தில் பறிபொருட்கள் கைப்பற்றப்பட்டமை, சர்வதேச ஆயுத வியாபாரிகளிடம் கொள்வனவு போன்றவற்றின் பயனாகக் கெரில்லாப் படைப்பிரிவுகள் பூரணமாக நவீனமாக சோவியத், சீன, அமெரிக்கத் தயாரிப்பு ஆயுதங்களைப் பெற்றுக்கொண்டன. கூடுதலாகப் பின்வரும் வகையைச் சேர்ந்த ஆயுதங்களே அவர்களிடம் அவதானிக்கப்பட்டன. உப இயந்திரச் சுடுகலன் பி.பி.எஸ்-41, ஏ.கே47, ஏ.கே.எம், ஏ.கே-74 கலாஸ்னிக்கவ் தன்னியக்கச் சுடுகலன்கள், எம்-14, எம்-16 தாக்குதல் சுரிசுடுகலன்கள், டிரகுனோவ் பதுங்கிச் சுடுகலன், ஆர்.பி.டி, ஆர்.பி.கே, பி.கே இயந்திரச் சுடுகலன்கள், ஆர்.பி.ஜி-2, ஆர்.பி.ஜி-7 எறிகணை செலுத்திகள், எஸ்.ஜி-43, எஸ்.ஜி.எம் முக்காலியில் பொருததுகின்ற இயந்திரச் சுடுகலன்கள், ஆர்.ஜி- 42, ஆர்.ஜி.டி-5, ஆர்.கே.ஜி-3 கையெறிகுண்டுகள், 57மி.மீ மற்றும் 82 மி.மீ குழல் விட்டமுடைய மோட்டார்கள், 82 மி.மீ. பின்னுதைப்பற்ற எறிகணை செலுத்தி, 23மி.மீ. தன்னியக்க விமான எதிர்ப்புச் சுடுகலன், சீனத்தயாரிப்பு பல்குழல் எறிகணை செலுத்தி (107மி.மீ. குழல் விட்டம், 8மி.மீ வரையான இலங்கைத் தாக்கும் தூரம்) எகிப்திய மற்றும் சீனத் தயாரிப்புக் கையில் வைத்து இயக்கும் விமான எதிர்ப்பு ஏவுகணை எஸ்.ஏ-7 (இக்லா-1), அமெரிக்கத் தயாரிப்பு ஸ்ரிங்கர் ஏவுகணை போன்றனவே அவையாகும். துருப்பெதிர்ப்பு மற்றும் ராங்கியெதிர்ப்புக் கண்ணிகள் கூடுதலாகச் சீன, எகிப்திய, இத்தாலிய, பாகிஸ்தானியத் தயாரிப்புக்களாக இருந்தன.

ஏனைய நாடுகளிலுள்ள அமைப்புக்களுடன் ஒப்பிடுகையில் ஆப்கான் எதிர்ப்பியக்க அமைப்பு பிரதானமாக வேறுபடுவதற்கான காரணம் யாதெனில், அங்கே ஒரு போதும் ஒரு தனியான கட்டளையாளனோ சமர் நடவடிக்கைகளுக்கான தனியான மூலோபாயத் திட்டமோ இருக்கவில்லை. பிரதேச நிலையமைப்பைப் பொறுத்தவரையில் சமரை மேற்கொள்வதற்கான பின்வரும் நான்கு பிரதான கோட்பாடுகள் இருந்தன.

நாட்டின் தெற்கிலும் தென்மேற்கிலும் நிலையாகத் தங்கி வாழ்பவர்கள், அரை நாடோடி வாழ்க்கை வாழும் இனங்கள், மலைப்பாங்கான கிராமங்களில் வசிக்கின்றவர்கள் போன்றோர்கள் சமர் புரிந்தார்கள். இங்கே சமர்ப் படைப் பிரிவுகளுக்குப் பிரதேசக் குடித்தலைவர்கள் (சேக்குகள்) தலைமை தாங்கினார்கள். இவர்களை இஸ்லாமிய மதகுருமார்கள் (முல்லாக்கள்) முற்றிலும் ஆதரித்தார்கள். வழக்கமாக, சமர் நடவடிக்கைகள் விளைச்சல்களின் அறுவடைக்குப் பின், அதாவது ஒகஸ்டிற்கும் டிசம்பரிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டன. மேற்கொள்ளவுள்ள நடவடிக்கையைச் சகல படைப்பிரிவுகளும் ஆராய்ந்ததுடன், அதற்கான திட்டம் ஒருவர் கூட நீங்கலின்றி சகல வீரர்களதும் சம்மதத்துடன் மாத்திரமே தீட்டப்பட்டது.

தொடர்வான்...
நெற்றிபொறியன்

# மங்கள சமரவீர - ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி முதல் தூய தேசப்பற்றாளர்கள் வரை (1989 - 2020)

1983 - ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட தொகுதி அமைப்பாளராக நியமனம்.

1989 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் சுதந்திரக் கட்சி சார்பில் களமிறங்கிய மங்கள சமரவீர - 11,971 விருப்பு வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

(1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கு பின்னர் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் மேலும் 6 ஆண்டுகளுக்கு சர்வஜன வாக்கெடுப்புமூலம் நீடிக்கப்பட்டதால் 89 இல்தான் தேர்தல் நடைபெற்றது. அதுவும் விகிதாசார விருப்பு வாக்கு அடிப்படையில்.)

நாடாளுமன்ற அரசியலை சிறப்பாக முன்னெடுத்த மங்கள சமரவீர, தனது ஆளுமையால் குறுகிய காலப்பகுதியில் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் நம்பிக்கையையும் வென்றெடுத்தார்.

1994 ஆகஸ்ட் 16 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலை பரந்தப்பட்ட கூட்டணி அமைத்தே ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எதிர் கொண்டது. அந்தவகையில் மக்கள் கூட்டணியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் களமிறங்கிய மங்கள சமரவீர 61,574 விருப்பு வாக்குகளைப் பெற்று 2ஆவது முறையும் நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்.

இத்தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 ஆண்டுகால தொடர் ஆட்சிக்கு சந்திரிக்கா அம்மையார் தலைமையில் சுதந்திரக் கட்சி முற்றுப்புள்ளி வைத்தது.

1994 இல் சந்திரிக்கா அம்மையார் தலைமையில் அமைந்த ஆட்சியில், மங்கள சமரவீர அமைச்சரவையில் இடம்பிடித்தார். தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சு பதவி வழங்கப்பட்டது. துடிப்புடன் செயற்பட்ட அவர் அத்துறையில் புரட்சிகரமான மாற்றங்களுக்கு வித்திட்டார்.

2000 ஒக்டோபர் 10 நடைபெற்ற தேர்தலிலும் சந்திரிக்கா அம்மையார் தலைமையிலான மக்கள் கூட்டணியே வெற்றிபெற்றது. மாத்தறையில் போட்டியிட்ட மங்களவும் வெற்றிநடைபோட்டார். அமைச்சரவையிலும் இடம்பிடித்தார்.

தேர்தல் நடைபெற்று 11 மாதங்களில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, 2001 டிசம்பர் 05 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் ஐ.தே.க. வெற்றிபெற்றது. சந்திரிக்கா அணி தோல்வி கண்டது. மாத்தறை மாவட்டத்தில் மங்களவின் வெற்றி தொடர்ந்தது.

நாடாளுமன்றத்தில் மிக முக்கிய பதவிகளுள் ஒன்றாகக் கருதப்படும் எதிரணி பிரதம கொறடா பதவியை வகித்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளராகவும் செயற்பட்டார். ஆளுங்கட்சிக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார்.

2004 ஏப்ரல் 2 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. 2004 ஜனவரி 20 ஆம் திகதி சந்திரிக்கா அம்மையார் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி. (வெற்றிலை சின்னம்) உதயமானது. ஜே.வி.பியும் கூட்டணியில் அங்கம் வகித்தது.

இத்தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தது. நாடாளுமன்றம் தெரிவான மங்களவுக்கு சந்திரிகாவின் அமைச்சரவையில் துறைமுகங்கள், விமான போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சு பதவி வழங்கப்பட்டது. பிதமராக மஹிந்த ராஜபக்ச அறிவிக்கப்பட்டார்.

2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்சவுக்காக மங்கள சமரவீர தீவிரமாக பிரச்சாரம் முன்னெடுத்தார். பரப்புரைகளுக்கான பொறுப்பு மங்களவிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. மஹிந்த வெற்றிபெற்றார். அவர் தலைமையிலான அமைச்சரவையிலும் மங்கள இடம்பிடித்தார்.

கருத்து முரண்பாடுகள் மற்றும் கொள்கை ரீதியிலான பிரச்சினைகளால் அமைச்சரவையில் இருந்து மங்கள வெளியேறினார்.

பின் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்தார். 2010 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டார். 59, 836 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் தெரிவானார்.

2015 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை வெற்றிபெற செய்வதற்கு தீவிரமாக செயற்பட்டார். அத்தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியும் கவிழ்ந்தது.



100 நாட்கள் ஆட்சியின்போது வெளிவிவகார அமைச்சராக செயற்பட்டார். ஜெனிவாவில் காலஅவகாசம் பெறுவதற்கு முக்கிய பங்கு வகித்து செயற்பட்டார்.

2015 ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட மங்கள, 96,092 விருப்பு வாக்குகளைப்பெற்று வெற்றிநடையை தொடர்ந்தார்.

பிணைமுறி விவகாரத்தையடுத்து நிதி அமைச்சர் பதவியில் இருந்து ரவி கருணாநாயக்க நீக்கப்பட்டார். ஜெனிவாவில் இணை அனுசரணை வழங்கியதால் சிங்கள தேசியவாத அமைப்புகளால் மங்கள மீதும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

2017 இல் மங்கள சமரவீர நிதி மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சராக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டார். வெளிவிவகார அமைச்சு பதவி திலக் மாரப்பனவிடம் ஒப்படைக்கப்பட்டது.

மைத்திரியின் ஆட்சிக்கவிழ்ப்பு சூழ்ச்சிக்கு எதிராகவும், ஜனநாயகத்துக்காகவும் மங்கள கடுமையாக போராடினார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக திகழ்ந்த மங்கள சமரவீர 2019 ஜனாதிபதித் தேர்தலின்போது, ரணிலின் எதிர்ப்புகளை, தடைகளையும்மீறி சஜித்தை பொது வேட்பாளராக களமிறக்குவதற்கும் முன்னின்று செயற்பட்டார். சஜித்துக்காக தீவிர பரப்புரைகளை மேற்கொண்டார்.

எனினும், 2019 நவம்பர் 16 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச வெற்றிபெற்றார். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாக பிளவுபட்டது. சஜித் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உதயமானது. மங்கள சமரவீர அக்கூட்டணியுடன் இணைந்து செயற்பட்டார்.

2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் களமிறங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் வேட்புமனுவும் தாக்கல் செய்தார். அதன்பின்னர் இறுதி நேரத்தில் போட்டியில் இருந்து விலகினார். இனிமேல் நாடாளுமன்ற அரசியலை முன்னெடுக்கப்போவதில்லை எனவும் அறிவித்தார்.

இறுதியாக 'தூய தேசப்பற்றாளர்கள்' எனும் அமைப்பை உருவாக்கி அதன் ஊடாக அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்.

மங்கள சமரவீர அரசியல்வாதி மட்டுமல்ல சிறந்த இராஜதந்திரியும்கூட. மனித உரிமை செயற்பாட்டாளர் என்றுகூட சொல்லாம். 88-89 காலப்பகுதியில் மனித உரிமைகளுக்காக மஹிந்தவுடன் இணைந்து சமராடியவர். நல்லாட்சி காலப்பகுதியிலும் மனித உரிமைகளுக்காக முன்னின்று செயற்பட்டவர்.

தேசிய இனப்பிரச்சினையை ஏற்றதுடன், அதற்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தவர். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் குரல் எழுப்பியவர். இதனால் சிங்கள கடும்போக்கு வாதிகளின் எதிர்ப்பையும் கடுமையாக எதிர்கொண்டவர். பௌத்த பிக்குகளைக்கூட வெளிப்படையாகவே விமர்சிக்கக்கூடிய அரசியல் தைரியம் படைத்தவர்.

தெற்கு அரசியலில் மிக முக்கிய புள்ளி, அஸ்திரம், கிங்மேக்கர் இப்படி பல பக்கங்களைக்கொண்ட மங்கள சமரவீர தனது 65 ஆவது வயதில் இன்று எம்மை விட்டு பிரிந்துவிட்டார். உங்கள் ஆத்மா இளைப்பாறட்டும். கொரோனா என்ற காலன் அவரையும் விட்டுவைக்கவில்லை.

எனக்கு தெரிந்தவரை அவர் இனவாத அரசியலையோ அல்லது மதவாத அரசியலையோ முன்னெடுத்தது கிடையாது. மாத்தறை மாவட்டத்தில் அவர் வெற்றிபெற வேண்டுமானால் சிங்கள, பௌத்த வாக்குகள் அவசியம். நிலைமை அப்படி இருந்தும் நீதியின் பக்கம் நின்று, உண்மைக்காக உரத்துக்குரல் எழுப்பியவர். அநீதிகளை கண்டித்தவர்.

அரசியல் ரீதியில் இவருடன் மோத முடியாத சிலர் தனிப்பட்ட வாழ்க்கையை கொச்சைப்படுத்தினர். மங்களவுக்கு எதிராக இனவாதிகளையும், தேசியவாதிகளையும் தூண்டிவிட்டனர். ஏன் 'புலி' முத்திரை கூட குத்தப்பட்டது. இருந்தாலும் அவரின் பயணம் தொடர்ந்தது. இப்படியான ஓர் அரசியல் வாதியின் - மனிதனின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றே.



எழுத்து - ஆர்.சனத்

# ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் - தலிபான்களுடன் ஒப்பிடுவது தவறு

ஆப்கானிஸ்தான் போரில் அமெரிக்கா தோற்றதாகச் சொல்கிறார்கள். உண்மையில் 20 ஆண்டுகளுக்குப் பின் இப்பொழுது தான் அமெரிக்கா முழுமையான வெற்றியை அடைந்திருக்கிறது எனலாம். அமெரிக்கா இல்லாத ஆப்கான் ஒரு நிலையான அரசாங்கத்தை பாதுகாப்பை மக்களுக்கு வழங்க முடியாத நிலையே தற்போது உருவாகியுள்ளது. 20 ஆண்டுகள் ஆப்கானில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் படையினர் வெளியேற ஆரம்பித்த கையுடன் தலிபான்களின் ஆக்கிரமிப்பு நடந்தேறியிருக்கிறது.

ஆப்கானில் பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கு இன்னமும் 'வடக்கு கூட்டணி' அல்லது ஐக்கிய இஸ்லாமிய முன்னணி வசம் உள்ளது. எமது பிரதேசத்தை தலிபான்களால் ஆக்கிரமிக்க முடியாது என்கிற இறுமாப்புடன் இவர்கள் செயற்படுகிறார்கள். அமெரிக்க, இஸ்ரேல் பன்னாட்டுப் படைகளின் ஆக்கிரமிப்பின் போதும் குறித்த பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கில் தனது தனித்துவத்தை பேணிப் பாதுகாத்ததுடன் தமக்கான பாதுகாப்புடன் அவர்கள் செயற்பட்டார்கள்.

அமெரிக்காவின் இராஜதந்திர நகர்வுகள் என்பது இரட்டைக் கோபுரத் தாக்குதலுடன் முஸ்லிம் தீவிரவாதிகளை அழித்தொழிக்க வேண்டும் என்பதே. ஆப்கான் போர் தொடர்பாக எழுந்த அத்தனை விமர்சனங்களையும் இன்று அமெரிக்கா தவிடுபொடியாக்கியுள்ளது. தலிபான் போராளிகள் சுதந்திரப் போராளிகள் இல்லை. அவர்கள் ஜனநாயகத்திற்கு விரோதமான மத அடிப்படைவாதிகள். அவர்களுக்கு எதிராக அமெரிக்கா போர் செய்தமை நூறு வீதமான உண்மை என்று கூறிவிட முடியாது. ஒருவேளை நியாயமாக இருக்கலாம் அல்லது உலகத்தை நம்புவதற்காக அமெரிக்காவின் ஒரு நாடகமாகக் கூட இது இருக்கலாம்.

எந்தவொரு நாட்டின் சுதந்திரமும், சுதந்திரமின்மையும் எங்களின் கைகளில் தான் தங்கியுள்ளது என்பதை ஆப்கான் விடயத்தில் அமெரிக்கா நிரூபித்துக்கொண்டே இருக்கிறது. ஆப்கானை விட்டு அமெரிக்கா வெளியேற வேண்டும் என்று கோசமிட்டவர்கள் இன்று அமெரிக்காவே அவசரப்பட்டு வெளியேறி விட்டது எனக் கோசமிடுகிறார்கள்.

இதனால் ஆப்கானில் அமெரிக்கப்படைகளுடன் கடமையாற்றியவர்கள் தலிபான்களால் சுட்டுக் கொல்லப்படுகின்றமை அந்த இனத்தையே அந்த இனம் அழிக்கின்ற ஒரு சூழலை அமெரிக்கா வெற்றிகரமாக அரங்கேற்றியிருக்கிறது. அமெரிக்காவுடன் பணியாற்றியவர்களை நடு ஆற்றில் விட்டுவிட்டுச் சென்ற கதையாகவே இது உள்ளது. ஆகவே ஆப்கானில் தலிபான் போராளிகள் அமெரிக்கா வசம் உள்ளார்கள் என்பதும் இங்கு மறைமுகமான ஒரு நகர்வு நகர்த்தப்படுகிறது என்றும் கூற முடியும்.

தலிபான்களைப் பொறுத்தவரை இன்னொரு நாட்டுக்கு எதிரான போர் அல்ல. தமது சொந்த நாட்டு மக்களையே அடிமைகளாக மாற்றியமைக்கின்ற நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுகிறார்கள். இன்று அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விமான நிலையம் மாத்திரமே தமக்குப் பாதுகாப்பு என ஆப்கான் மக்கள் சிந்திக்கும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது. எம்மை தலிபான்களிடம் விட்டுச்செல்லாதீர்கள் என பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை வேண்டிக்கொள்கிறார்கள். இதனைவைத்துப் பார்த்தால் அமெரிக்கா இப்பொழுது ஆப்கானை ஆக்கிரமிக்கும் போரில் முழுமையாக வெற்றி பெற்றிருக்கிறது எனலாம்.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் ஆப்கானில் அதிகரித்துவருவதாக பல மகளிர் அமைப்புக்கள் குரல்கொடுத்து வருகின்றனர். 8ம் வகுப்புடன் பெண்கள் படிப்பினை முடிக்க வேண்டும் எனவும் ஆண்களின் உதவியுடன் தான் பெண்கள் வெளியில் வரவேண்டும் என்பதுடன் முக்கியமானத் துறைகளில் பெண்களை பணிக்கு அமர்த்தக்கூடாது எனவும் பொதுவாக பெண்கள் அடிமையானர்கள் என்ற நிலைப்பாட்டிலேயே பெண்கள் நடத்தப்படுகின்றர்கள் என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. ஆப்கானில் தமக்கு இழைக்கப்பட்ட பாலியல் கொடுமைகள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பில் அம்மக்கள் சர்வதேச ஊடகங்களுக்கும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆப்கானில் தலிபான்களின் காலத்தில் இருந்த பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அது மட்டுமன்றி அமெரிக்காவிற்கு ஆப்கானில் உயர் பதவிகளை வகித்துவந்தவர்கள் ஆங்காங்கு சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இதேநேரம் ஆப்கானுடன் இசைந்து சர்வதேச சமூகம் செயற்படவேண்டும் என ஒரு சில நாடுகள் கோரியுள்ளது. ஆப்கானின் தலை நகர் காபூல் கைப்பற்றப்பட்டபோது இந்த வெற்றிக்கு பின்னால் விடுதலைப்புலிகள் ஆதரவாக செயற்பட்டார்கள் என கூறப்பட்டிருந்தது. இதற்கு மறுப்பு தெரிவித்த தலிபான்கள் எமது போராட்டம் தனித்துவமானது. விடுதலைப்புலிகளுக்கும் எமக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என குறிப்பிட்டிருந்தனர். இதனை மையமாக வைத்தே ஊடகங்கள் செய்திகளை திரிபுபடுத்தி வெளியிட்டிருந்தன.

இலங்கையின் உள்நாட்டுப்போர் என்பது சர்வதேச அரசியலுக்கும் தொடர்புபட்டது. இலங்கையில் போராட்டம் என்பது சுமார் 30 வருட காலங்களுக்கும் மேற்பட்டது. அப்போது இலங்கையில் மன்னர்களும் போராட்டங்களைச் செய்தனர். தமிழினத்தின் விடுதலைக்காக வடகிழக்கு என ஒரு தனியான அதாவது கடல், வான், தரை என 58 கட்டமைப்புக்களை உருவாக்கி தமிழீழம் என்கிற நாடு உருவாக்கப்படவேண்டும் என இறுதிவரை விடுதலைப் புலிகள் அமைப்பினர் போராடினார்கள். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் பெண்களுக்கு சுதந்திம் வழங்கப்பட்டது. அடிமை என்ற பேச்சுக்கு இடமில்லை. அனைத்துத் துறைகளிலும் பெண்கள் அதிவேக வளர்ச்சி கண்டார்கள். இவ்வாறு தான் விடுதலைப்புலிகளின் போராட்டம் பயணித்தது. ஒரு ஒழுக்கமுள்ள இயக்கம் உருவாகக்கூடாது என்பதில் இலங்கை அரசு மாத்திரமல்ல, இந்தியா உட்பட்ட பல உலக நாடுகளும் உறுதியாகவிருந்தார்கள்.





விடுதலைப்புலிகளின் ஆட்சிக்காலத்தில் இலங்கை கடற்பரப்பில் அந்நிய நாடுகளின் ஆதிக்கம் இருந்ததாக வரலாறு இல்லை. அத்துமீறி அந்நிய நாடுகள் கடற்பரப்பில் செயற்பட்டால் அக்கப்பல் விடுதலைப்புலிகளின் வசமாகியது. இன்று கச்சதீவினை இலங்கை இழக்கும் நிலை வந்துள்ளது. அதுமாத்திரமன்றி ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்காக பதினைந்தாயிரம் நிலப்பரப்பு சீனாவின் வசமாகியுள்ளது. அதிலும் குறிப்பாக 640 ஏக்கர் வரையில் சீனர்களின் கடற்படைத் தளமாக தற்பொழுது இயக்கப்பட்டு வருகின்றது. இவை நீண்ட தூர குத்தகை அடிப்படையில் சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் இலங்கையின் மொத்த கடனாக சீனாவினால் 64.05 பில்லியன் ரூபாய்க்கு மேல் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. சீனாவை இலங்கையில் இருந்து பூகோள ரீதியாக வெளியேற்றுவது என்பது தற்போதைய சூழலில் சாத்தியமற்றதொன்று. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தனக்கானதொரு தனித்துவத்தை இலங்கையின் துறைமுகத்தைக்கொண்டு தற்போது சீனா தக்கவைத்துக் கொண்டுள்ளது. அதனுடன் கொழும்புத் துறைமுகமும் சீனாவிற்கு தாரைவார்க்கப் பட்டுள்ளது. இந்த பூகோள அரசியலில் விடுதலைப்புலிகளின் தலையீடு இல்லாததன் காரணமாக இலங்கை அந்நிய சக்திகளுக்கு அடிபணிந்த தே தவிர வேறொன்றுமில்லை.

ஆப்கானில் மக்கள் வெளியேற்றத்திற்கு தலிபான்களினால் கொடுமைப்படுத்தப்படுவதே காரணமாகும். தமிழர் தாயகத்தில் வடகிழக்கினைக் கோரிய விடுதலைப்புலிகள் சிங்களப் பகுதிகளுக்குள் சென்று சிறுவர் துஸ்பிரயோகங்களில் அல்லது பாலியல் துன்புறுத்தல்களின் ஈடுபட்டதற்கான வரலாறுகள் இல்லை. ஒழுக்கமுள்ளவர்கள் தான் அவர்கள். தமக்கான நிலத்தை பாதுகாப்பதில் கடல்,வான், தரை என முப்படைகளுடன் முழுமையாக செயற்பட்டார்கள். ஆனால் இன்று இலங்கை அந்நிய நாடுகளின் அடிவருடிகளாக செயற்படுவது மட்டுமன்றி, கொரோனா வைரசினைப் பரப்பிய சீனாவுடன் தனது நட்புறவினைப் பேணிப் பாதுகாத்து வருகின்றது. 65610 சதுர கிலோ மீற்றர் பரப்பளவினைக் கொண்ட இலங்கைத் திருநாட்டை தாரைவார்த்தது மட்டுமல்லாது.

இன்று திடீரென சீனாவிற்கு எதிராக இலங்கை அரசு செயற்படுமாகவிருந்தால் இரசாயன ஆயுதங்களைக்கொண்டு இலங்கையினை அழித்துவிடும் சூழல் கூட உருவாக்கப்படலாம். ஆகவே எமது நாட்டை நாம் முதலில் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். உள்ளூர் போரை பயங்கரவாதம் எனக் காட்டி விடுதலைப்புலிகளின் போராட்டத்தை மழுங்கடித்த இலங்கை. இன்று அந்நிய நாடுகளுக்கு இலங்கையினை விற்கும் அளவிற்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளது. இந்நிலை தொடர்ந்தால் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கூட சீனாவின் கைகளில் இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஒரு முஸ்லீம் தீவிரவாத அமைப்புடன் இலங்கையரசு பேசத் துணிவது என்பதும் ஆப்கானை அங்கீகரிக்கும் அளவிற்கு முன் வந்துள்ளமையும் ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடிய போராட்டத்தை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தியதும் சர்வதேச அரங்கில் நடந்தேறியுள்ளது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் எந்த நாட்டை எவ்வாறு ஆக்கிரமிக்கவேண்டும் என்பதிலும் அந்த நாட்டில் தனக்கான சுயலாபம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து நீண்டகால உத்தியுடன் களமிறங்கிச் செயற்படுகின்றது. குறிப்பாக ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் போரை முடுக்கிவிட்டு குறித்த தலைமைகளை கொலைசெய்து அவர்கள் மீது வீண்பழி சுமத்திய அமெரிக்கா, இலங்கையில் இனப்படுகொலை நடந்திருக்கிறது. இதற்கான சூத்திரதாரிகள் யார் என தெரிந்தும் இராணுவ, இராஜதந்திர ரீதியாக தனது அணுகுமுறைகளை மேற்கொள்ளவில்லை என்பது சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

இலங்கைத் தளத்தை எவ்வாறாயினும் கைப்பற்றவேண்டும் என்கிற மும்முனைப் போட்டியில் அமெரிக்கா, இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு சீனா வெற்றி பெற்றுவிட்டது என்றே கூறமுடியும். தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவிற்குப் பாரிய அச்சுறுத்தலாக சீனா திகழ்கின்றது. தனது சர்வாதிகார சக்தியையும், உலக அளவில் பொருளாதார, ஆயுத ரீதியாக வளர்ச்சி கண்டுள்ள சீனா, இனி எத்தகைய போர் உத்திகளை யார் தனது நாட்டுக்கு எதிராக மேற்கொண்டாலும் அதனை இரசாயனம் கொண்டு அழித்துவிட முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளது. தற்போதைய நிலையில் உலக வல்லரசுகள் கூட சீனாவுடன் மோத பயந்துள்ளன. ஆகவே ஆப்கான் மீதான தலிபான்களின் போராட்டம் என்பது வேறு. இலங்கையில் விடுதலைப்புலிகளின் விடுதலைப் போராட்டம் என்பது வேறு என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

**-இரணியன்-**

# அரச ஊழியர்களின் சம்பளத்தையும் ஏப்பமிட நினைக்கு மஹிந்த குடும்பம்

இலங்கை தீவு எதிர்கொண்டு நிற்கும் மோசமான நிதி நெருக்கடிகளுக்கு வினைத்திறனற்ற நிதி நிருவாகம் , ஊழல் மோசடிகள். தவறான முதலீடுகள். என்பன அடிப்படையான காரணமாக இருக்கின்றன என்பதை ராஜபக்சே குடும்பத்தின் விசுவாசிகள் மறைக்க முயற்சிக்கின்றார்கள் ராஜபக்சே குடும்ப உறுபினர்களுக்கும் அவர்களின் நண்பர்களும் மட்டும் கடந்த 15 ஆண்டுகளில் கோடிக்கணக்கான அரச பொது நிதியை திருடி இருக்கிறார்கள். சட்டவிரோதமாக செலவு செய்து இருக்கின்றார்கள்



குறிப்பாக. மகிந்த ராஜபக்சே தலைமையில் நடத்தப்பட்ட 'தேசத்திற்கு மகுடம்' கண் காட்சி நிகழ்வுகளை முன்னிறுத்தி ஏற்பாடு செய்யப்பட்ட வீதிகள் நிர்மாணிக்கும் திட்டத்தில் மட்டும் 300 மில்லியன் ரூபா அரச பணம் திருடப்பட்டது மஹிந்த ராஜபக்சே அவர்களின் ஏற்பாட்டில் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு முதல் கட்டு நாயக்க வரையான விரைவு வீதி அபி விருத்தி திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட 46.8 மில்லியன் பணத்திற்கு எவ் விதமான கணக்குகளும் இல்லை ராஜபக்சே குடும்ப உறுப்பினர்கள் இலங்கை விமானப்படை க்கு சொந்தமான விமானங்களை தனி ப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தியதன் வகையின் 2,278,000 பெறுமதியான அரச பணத்தை சட்டவிரோதமாக செலவு செய்து இருந்தார்கள்

கோத்தபாயா ராஜபக்சே அவர்கள் தனது மைத்துனர் உதய வீரதுங்க சகிதம் மிக் விமானங்கள் கொள்வனவின் போது போலி நிறுவனம் (Bellimissa Holdings Limited) ஒன்றின் பெயரில் 10 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் மோசடி செய்து இருந்தார்

கோத்தபாயா ராஜபக்சே அவர்களின் தலைமையில் பெற்றோருக்கு நினைவு இல்லம் அமைப்பதற்காக 33 மில்லியன் பெறுமதியான அரச பொதுநிதி சட்டவிரோ தமாக பயன்படுத்தி இருந்தார்கள் நாமல் ராஜபக்சே அவர்கள் தலைமை தாங்கிய இளைஞர்களுக்கான நாளை அமைப்பு அரசுக்கு சொந்தமான 172 மில்லியன் ரூபா பணத்தை களவாடி இருந்தது

அதே போல நாமல் ராஜபக்சே அவர்கள் அரச பொதுநிதிக்கு சொந்தமான 45 மில்லியன் ரூபா பணத்தை தனிப்பட்ட தேவைகளுக்காக சட்டவிரோதமாக மோசடி செய்து இருந்தார்

இது தவிர. நாமல் ராஜபக்சே 500,000 அமெரிக்கா டொலர்களை இலஞ்சமாக பெற்று கொண்டு அரச நிதியை துஸ்பிரோயோகம் செய்து இருந்தார் பாடசாலை மாணவராக இருந்த யோசித்த ராஜபக்சே அவர்களுக்கு சொந்தமான CSN தொலைக்காட்சி நிறுவனம் ஆரம்பிக்க பயன்படுத்தப்பட்ட 365 மில்லியன் ரூபா பணம் எங்கிருந்து பெறப்பட்டது என்பதற்கான எவ்விதமான கணக்குகளும் இல்லை

கோத்தபாயா ராஜபக்சே அவர்கள் தொடர்புடைய அவன்காட் மிதக்கும் ஆயுத களஞ்சியசாலை விவகாரத்தில் 11.4 பில்லியன் அரச பொது நிதிக்கு இழப்பு ஏற்படுத்தப்பட்டு இருந்தது

பொருளாதார விவகார அமைச்சராக இருந்த பசில் ராஜபக்சே அவர்கள் திவி நெகுமே அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்த மான 3000 மில்லியன் ரூபா பணத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் கையாடல் செய்து இருந்தார் . சட்டவிரோத பணபரி மாற்றத்தின் மூலம் இலங்கையின் பல பகுதிகளில் 282 மில்லியன் ரூபா பெறுதியான சொத்துக்களை பசில் ராஜபக்சே அபகரித்து இருக்கின்றார். பசில் ராஜபக்சே அவர்களின் பொறுப்பின் கீழ் அப்பாவி பொதுமக்களுக்கு என உருவாக்கப்பட்ட அரச பொது வீடமைப்பு திட்டத்தில் செய்த மோசடி மட்டும் 70 மில்லியன் அரச பொது நிதிக்கு எவ்விதமான கணக்குகளும் இதுவரை இல்லை .அதே போல ராஜபக்சே குடும்ப உறுப்பினர்களும் அவர்களின் நண்பர்களும் சட்டவிரோதமாக சம்பாதித்த 2 பில்லியனுக்கும் அதிகமான பணத்தை வெளிநாடுகளில் பதுக்கி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றது.



மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் போன்று நூற்றுக்கணக்கான சம்பவங்களின் பொது அரச பொது நிதி கையாடல் செய்யப்பட்டு இருந்தது. இது போதாதென்று தேர்தல் அரசியலுக்காக முன்னெடுக்கப்பட்டு தோல்வியடைந்த பாரிய அபிவிருத்தி (?) திட்டங்களான. அம்பாந்தோட்டை துறை முகம் , அம்பாந்தோட்டை விமான நிலையம் , கொழும்பு தாமரை தடாகம் 100,000 பேருக்கான அரச வேலைவாய்ப்பு மற்றும் 50,000 பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு போன்ற பல திட்டங்களில் அரச பொது நிதி பாரிய இழப்பை சந்தித்தது.

அதே போல மேற்குறித்த திட்டங்களுக்காக பெருமளவு கடன்கள் பெறப்பட்டன. சாத்திய ஆய்வுகள் இன்றி பணம் அச்சிடப்பட்டன இந்த சூழ்நிலையில் அரச பொது நிதி எதிர்கொண்டு நிற்கும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அரச ஊழியர்களை தங்களது மாத சம்பளத்தை தியாகம் செய்யுமாறு ராஜபக்சே நிருவாகம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகி ன்றன கோடிக்கணக்கான பணத்தை திரு டிய ராஜபக்சே குடும்பத்தினரை தவிர்த்து வெறும் 20000-50000 வரை சம்பளம் பெரும் அரசாங்க ஊழியர்களை தியாகம் செய்ய கோருவது கோரமானது

நெற்றிபொறியன்

# இலங்கையில் தலைவரித்தாடும் டெல்டா



அபிவிருத்தியடைந்து வரும் நாடான இலங்கை, கொரோனா பரவலுக்கு முகங் கொடுத்துள்ள இவ் இக்கட்டான சூழலில் பொருளாதார ரீதியாகவும், அனைத்துத்துறைகளையும் முடக்கி வைத்து ஒன்றும் செய்ய முடியாத அளவிற்கு அரசாங்கம் வந்துள்ளது. எனினும் தற்போது கொழும்பில் தற்போது பரவி வரும் கோவிட் வைரஸ் 100 வீதம் டெல்டா மாறுபாடு என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்தியர் சந்திம தெரிவித்துள்ளார். இதன்படி, இலங்கையில் பரவுவதை 'சூப்பர் டெல்டா' என்று அழைக்கலாம் என்றும் அதன் நடத்தை மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், நாட்டில் வெற்றிகரமான தடுப்பூசி செயல்முறை காரணமாக, செப்டம்பர் இறுதியில் சில பலன்களை எதிர்பார்க்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் கோவிட் தொற்று வேகமாக பரவி வரும் நிலையில், இன்றைய தினம் (27) 4,561 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய நாட்டில் இதுவரை பதிவாகிய மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 416,931 ஆக அதிகரித்து ள்ளதுடன், நேற்றைய தினம் (27) கோவிட் தொற்றால் 214 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்படி, இலங்கையில் கோவிட் தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 8,371 ஆக அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையில், நாடளாவிய ரீதியில் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகள், ஔடத உற்பத்தி, விநியோகம், ஏற்றுமதி, விவசாயம் மற்றும் ஆடை கைத்தொழில் உள்ளிட்ட பிரிவுகள் எவ்வித இடையூறுமி ன்றி சேவைகளை முன்னெடுக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டுள்ள தொழிற்துறைக்கு செல்வோர், வீதித் தடைகள் இடப்பட்டுள்ள இடங்களில்தங்களின்ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் கட்டாயமானது என இராணுவத் தளபதி கூறியுள்ளார். அத்தியாவசிய சேவைகள், விவசாயம், ஏற்றுமதித்துறை, ஆடை கைத்தொழில் உள்ளிட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள தொழிலுக்கு மாத்திரமே தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில் பயணிக்க முடியும்.

இதேவேளை, மரணங்கள் மற்றும் நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் கருத்திற் கொள்ளும் போது, கொரோனாவினால் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ள நாடுகள் வரிசையில் இலங்கையும் இணைந்து ள்ளதாக வைத்திய நிபுணர்களின் சங்கம் அறிவித்துள்ளது. சுகாதார ஊழியர்களும் COVID-19 தொற்றுக்குள்ளாதல், ஒக்சிஜன் உதவியுடன் இருக்கும் நோயாளர்கள் உள்ளிட்ட மொத்த நோயாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு என்பன இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக வைத்திய நிபுணர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறி ப்பிடப்பட்டுள்ளது. எனினும், தொற்று உச்ச நிலையை அடைந்திருந்த போது, அமுல்படுத்தப்பட்ட முடக்கத்தின் போது சட்டங்கள் எதிர்பார்த்தளவில் நடைமுறை ப்படுத்தப்படாமை கவலையளிப்பதாகவும் வைத்திய நிபுணர்கள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. உரிய பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், குறைந்த பட்சம் 14 நாட்கள் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது. தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப் பாட்டு காலமானது போதுமானதாக இல்லை என சங்கத்தின் தலைவர், உபுல் ரோஹன குறிப்பிட்டார். நாட்டில் தொடர்ச்சியாக அதிகமான கொரோனா நோயாளர்கள் பதிவாவதுடன், இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அவர் கூறினார். உரியவாறு பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டால், எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடுப் பகுதியில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படலாம் என உபுல் ரோஹன தெரிவித்தார். தற்போது பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், வீதிகளில் அதிகளவான வாகனங்கள் பயணிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இதுவரை (27) மொத்தமாக 416,961 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சிகிச்சையில்55,399 பேரும், 353,191 பேர் குணமடைந்துள்ளனர்.

உலகளவில் கடந்த (27) நிலவரத்தின்படி, 214,468,601 உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் பதிவாகி யுள்ளதாகவும், 4,470,969 உலகளவில் மரணமடைந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தொடர்ந்தும் ஊரடங்கு அமுல்படுத்துவதனால் மனித வாழ்க்கை மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கம் குறித்த தகவல்கள் வெளியி டப்பட்டுள்ளன. உலக சுகாதார அமைப்பின் (WHO) நிதியுதவியில் அன்று நடைபெற்ற இணைய மாநாடு ஒன்றின் போது இது குறித்த தகவல்கள் வெளியி டப்பட்டுள்ளன. உள் நாடு மற்றும் வெளி நாடுகளில் இருந்து 33 சுயாதீன வல்லுநர்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில், ஆகஸ்ட் 30ம் திகதிக்க பின்னர் ஊரடங்கு ரத்து செய்யப்பட்டால், கோவிட் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 16,700 ஆக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பொருளாதாரத்தின் மீதான தாக்கம் 1.12 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். செப்டம்பர் 18ம் திகதி வரை ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டால் கோவிட் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 13,712 ஆக குறையும் என்று நிபுணர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். எனினும், இதனால் பொருளாதாரத்தில் 1.67 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒக்டோபர் 2ம் திகதி ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டால், இலங்கையின் பொருளாதார இழப்பு 2.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனினும், கோவிட் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 10,400 ஆகக் குறைக்கப் படும் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர்.

இவ் இக்கட்டான காலகட்டத்தில் மக்களது பொருளாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பினை இழந்துள்ளனர். இந்த நெருக்கடியான நேரத்தில் நாட்டினுடைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் திடீர் திடீரென அதிகரிப்பதானது மக்கள் மத்தியில் பெரும் குழப்பநிலைகளை ஏற்படுத்தியுள்ளது. கையில் பணம் இல்லாமலும், கடைகளில் வாங்குவதற்குப் பொருட்கள் இல்லாமலும் மக்கள் துன்பப்படும் நிலையினை நாம் காண்கி ன்றோம். கிராமங்களில் வாழும் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள். நாளாந்த கூலி வேலைகளுக்குச் செல்லும் இவர்களின் நிலை தலைகீழாக மாறியுள்ளது. டெல்டா வைரஸ் இலங்கை யில் மிக வேகமாகப் பரவி வருவதாகவும், எதிர்காலத்தில் நாட்டினை முடக்கினால் மாத்திரமே ஓரளவு பரவலையும் மரணங்களையும் கட்டுப்படுத்த முடியும் என்கின்ற நிலையில், மக்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படப்போகிறது.

மக்களுக்கான சலுகைகளை வழங்கு கின்றோம் என அரசு வழங்கிய 5000 ரூபாய் கொடுப்பனவே போதியதாக இல்லாத நிலையில், 2000 ரூபாவை வைத்துக் கொண்டுநாம் எதை வாங்குவது என மக்கள் அங்கலாய்க்கின்றனர். விலைவாசிகள் உயர்ந்துள்ள நிலையில் அரசின் இந்தத் தொகையானது போதியதாக இல்லை.

நாட்டினுடைய பொருளாதாரம் குறித்து திடீரென பேசுகின்ற அரசு, மக்களுடைய வரிப்பணத்தைப் பயன்படுத்துகின்ற அரசு, இவ்வளவு காலமும் மக்களுக்கு வழங்கிய சலுகைகள் என்ன? அவற்றால் மக்கள் திருப்தியடைந்தார்களா? என்கிற கேள்விகள் எழுகிறது.

உலக நாடுகளின் பொருளாதாரமும் இந்த கொரோனா வைரசினால் பாதிக்கப் பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் அவற்றின் நிலையான அபிவி ருத்தித்திட்டங்களால் அவை இக்காலத் தில் தமது மக்களையும் நாட்டின் பொருளா தாரத் துறையினையும் சீர்செய்துகொள்ளக் கூடிய வகையில் தமது கொள்கைகளை மாற்றியமைத்துக்கொண்டுள்ளன. கொரோனாப் பரவல் கட்டுப்பாட்டின் கீழ் வந்தவுடன், தமது வழமையான செயற் பாடுகளை துரிதகதியில் முன்கொண்டு செல்லக்கூடிய விதத்தில் அந்தந்த நாடுக ளின் அரசுகள் இருக்கின்றன. துறை சார்ந்த நிபுணர்களை ஏராளம் வைத்துக் கொண்டு நாட்டை இக்கட்டான சூழ் நிலையில் கையாளக்கூடிய அளவிற்கு செயற்படுகின்றன. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை நிலைமைகள் அனைத்தும் தலைகீழாக மாறியுள்ளது. அரச சொத்துக்களை சூறையாடுவதும், மத்திய வங்கியிலே கொள்ளையடிப்பதும், அரச பணத்தை கொள்ளையடிப்பதும் என ஊழல்கள் மலிந்துபோனதொரு நாட்டில் இக்கட்டான காலத்தில் நாட்டைச் சமாளிப் பதற்கேற்ற செயற்பாடுகள முன்கொண்டு செல்லமுடியாது.நிலையானஅபிவிருத்திகள் எதுவும் இல்லாமல் இன்று நாடு தடுமாறிப் போயுள்ளது. அந்நிய நாடுகளிட மிருந்து கடன்களைப் பெற்று இந்நாட்டின் வளங்களை விற்கும் அளவிற்று நிலைமை இன்று வந்துள்ளது.

முன்னாள் ஆட்சியாளர் மஹிந்தவின் காலத்தில் தான் சீனாவின் செல்வாக்கு இந்நாட்டில் அதிகரிக்க ஆரம்பித்தது. அது படிப்படியாக வளர்ந்து, இன்று சீனாவின் கொள்கைகளையே இங்கும் கடைப் பிடிக்கவேண்டிய சூழலுக்குள் இலங்கை தள்ளப்பட்டுள்ளது. சீனாவிடமிருந்து தேவையான கடன்களை உடனடியாகப் பெறக்கூடிய அளவிற்கு இலங்கை வளர்ச்சியும் பெற்றுள்ளது.

நிலையான அபிவிருத்திகளும், துறை சார்ந்த வல்லுனர்கள் அடங்கிய ஆளணிக் கட்டமைப்பும் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் அவசியமாகிறது. அப்போதுதான் ஒரு நாடு இக்கட்டான சூழ்நிலையின் போது தடுமாறாமல் முன்னோக்கிப் பயணிக்கும். மக்களது பாதுகாப்பு குறித்து சுகாதாரத் தரப்பினராலும் உலக சுகாதார நிறுவனத்தினாலும் அறிவுரைகள் ஏராளமாகக் கூறப்பட்டிருக்கிறது. கொவிட் வைரசைக் கட்டுப்படுத்த மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை எனினும் தடுப்பூசிகள் அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே நாட்டு மக்கள் சுகாதார வழிமுறைகளை மிகவும் கடுமையாக இனிவரும் காலங்களில் கடைபிடிக்கவேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் இலங்கையில் நாளாந்த மரணங்களின் எண்ணிக்கை 200ஐ கடந்துள்ள நிலையில், இப்போது இலங்கையின் தற்போதைய கொவிட் பரவல் நிலை குறித்து நன்கு அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. மக்களது சுயதனிமைப்படுத்தல் என்பது காலத்தின் கட்டாயம். ஜனநாயக நாட்டினது அரசு நாட்டு மக்களைப் பாதுகா ப்பது என்பதும் கடமை.

**சுழியோடி**



# பிராந்திய செய்திகள்



## புகைப்பிடிப்பவர்களுக்கான அறிவிப்பு

புகைப்பிடிப்பவர்கள் கொவிட் காரணமாக மரணிக்க அதிக வாய்ப்புள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர். புகைபிடித்தல் நுரையீரலின் செயல்பாட்டை பலவீனப்படுத் துகிறது என்று கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தீபால் பெரேரா கூறினார்.

மேலும், சிகரெட், சுருட்டு அல்லது வேறு வேறு வகையில் புகைப்பிடிப்பவர்களின் நுரையீரல் செயல்பாடு பலவீனம் அடைவதாகவும் விசேட வைத்தியர் சுட்டிக்காட்டினார். இவ்வாறானவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்படுவதனால், மிக விரைவாக கொவிட் நிமோனியா நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். புகைப்பிடிப்பவர்களுக்கு அரு காமையில் இருக்கும் குழந்தைகளின் நுரையீரலிலும் சிகரெட் புகையானது பெரும் பாதி ப்பை ஏற்படுத்தும். எனவே இவ்வாறான குழந்தைகளுக்கும் கொவிட் தொற்று ஏற்பட்டால் உடலில் கடுமையான நோய்கள் ஏற்பட்டு மரணம் கூட ஏற்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விற்றமின் சீ மற்றும் விற்றமின் டீ மருந்துகளுக்கு வவுனியாவில் தட்டுப்பாடு

கோவிட் தொற்று காரணமாக வவுனியா மாவட்டத்தில் விற்றமின் சீ மற்றும் விற்றமின் டீ ஆகிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

நாட்டில் கோவிட் தொற்று வேகமாக அதிகரித்து வரும் நிலையில் தொற்றாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்கும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகி ன்றது. அத்துடன் கோவிட் தொற்றிலிருந்து பாதுகாக்க நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்க கூடிய விற்றமின் சீ மற்றும் விற்றமின் டீ ஆகிய மாத்திரைகளை பயன்படுத்துமாறு சில மருத்துவர்கள் அறிவுரை கூறியுள்ளனர்.

இதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் பலரும் விற்றமின் சீ மற்றும் விற்றமின் டீ ஆகிய மருந்துகளை அதிகளவில் கொள்வனவு செய்து வீடுகளுக்கு கொண்டு செல்வதனால் பல தனியார் மருந்தங்களில் விற்றமின் சீ மற்றும் விற்றமின் டீ மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் தனியார் மருந்தகங்களுக்குச் செல்லும் பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதையும் அவதானிக்க முடிவதாக எமது பிராந்திய செய்தியாளர் குறிப்பிட்டார். அத்துடன், பரசிட்டமோல் மருந்துக்கான கேள்வியும் அதிகரித்துள்ளமையால் சில மருந் தகங்களில் அதன் இருப்பு முடிவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் ஒருவர் பலி

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்பூர் நாவலடிச் சந்தியில் மோட்டார் சைக்கிளும் - பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் மோ ட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து அன்று (27) மாலை இடம்பெற்றுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர் மூதூர்-சம்பூர் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சிவராசா நவநீதன் வயது (28) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபரின் சடலம் தற்போது சம்பூர் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பட்டா வாகனத்தைச் செலுத்திச் சென்ற நபரை சம்பூர் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை மூதூர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், விபத்து தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.



## பொருளாதார மத்திய நிலையங்கள் திறப்பு

நாடளாவிய ரீதியில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்கள் இன்று மற்றும் நாளை திறந்து வைக்கப்படவுள்ளது.

மொத்த விற்பனைக்காக இவ்வாறு பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்படவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் இன்று காலை 4 மணி முதல் வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது.



## வவுனியா, கற்குளம் படிவம் 3 பகுதியில் திடீரென மயங்கி விழுந்தவர் மரணம்

வவுனியா, கற்குளம் படிவம் 3 பகுதியில் திடீரென மயங்கி விழுந்த நபரொருவர் இன்று உயிரிழந்துள்ளதாக சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.வவுனியா, கற்குளம் படிவம் 3 பகுதியில் வசிக்கும் 50 வயது மதிக்கதக்க ஆண் ஒருவர் திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்துள்ளார். இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் குறித்த நபர் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

எனினும், வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கு முன்னரே அவர் மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து குறித்த நபருக்கு கோவிட் தொற்று உள்ளதா என பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பரிசோதனை முடிவுகளையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் மருத்துவர் உட்பட மூவர் கொரோனாவால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த மருத்துவர் உள்ளிட்ட மேலும் மூவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையில் மருத்துவச் சான்றிதழ் வழங்கும் மருத்துவர்களில் ஒருவரான நல்லூரைச் சேர்ந்த 72 வயதுடையவரே கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

மேலும், மானிப்பாயைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரும், உரும்பிராயைச் சேர்ந்த 56 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்தனர். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 227ஆக உயர்வடைந்துள்ளது.






# சினிமா துளிகள்




## புதிய சீரியலில் கமிட்டான ஈரமான ரோஜாவே சீரியல் நடிகர் ஷ்யாம்

விஜய் தொலைக்காட்சியில் மதிய நேரத்தில் ஹிட்டாக ஓடிக் கொண்டிருந்த சீரியல்களில் ஒன்று ஈரமான ரோஜாவே. இந்த சீரியல் மக்களிடம் பெரிய வரவேற்பு பெற்று வந்தது.



சீரியல் முடியப்போகிறது என்பதை தெரிந்துகொண்ட ரசிகர்கள் ஏன் முடிக்க வேண்டும் கதைக்களத்தை சுவாரஸ்யமாக மாற்றி சீரியலை தொடரலாமே என்று கமெண்ட் செய்து வந்தனர்.

முடிந்துள்ள இந்த சீரியலில் புகழ் என்ற கதாபாத்திரத்தில் நடித்து வந்தவர் ஷ்யாம்.

இப்போது இவர் பாவம் கணேசன் என்ற சீரியலில் கௌதம் என்ற வேடத்தில் புதிதாக நடிக்க தொடங்கியுள்ளார்.

## அடுத்தடுத்து வெளியாகும் விஜய் சேதுபதியின் இரண்டு படங்கள்!

மறைந்த இயக்குனர் எஸ்.பி ஜனநாதன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்துள்ள லாபம் திரைப்படம் செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி வெளியாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் அதற்கு அடுத்த நாள் (10ஆம் திகதி) விஜய் சேதுபதியின் நடிப்பில் உருவாகியுள்ள துக்ளக் தர்பார் திரைப்படமும் வெளியாகவுள்ளது.

கொரோனா தொற்று பரவல் குறைவடைந்துள்ள நிலையில், லாபம் திரைப்படம் திரையரங்கில் வெளியாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ராஷ்மிகா இடத்தை பிடித்த அஞ்சலி

தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கும் ராஷ்மிகா மந்தனாவின் இடத்தை அஞ்சலி தற்போது பிடித்திருக்கிறார்.

இந்தியன் 2 படத்தை இயக்கி வந்த ஷங்கர், தயாரிப்பு நிறுவனம் லைகாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, அப்படத்தை கைவிட்டு தெலுங்கில் ராம் சரண் நடிப்பில் ஒரு படத்தை இயக்கி வருகிறார்.

இந்தப் படத்தில் கொரியன் சிங்கர் சூஷி பே முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறார். அதோடு, படத்தில் நாயகியாக அலியாபட், கியாரா அத்வானி, மாளவிகா மோகனன் ஆகியோரிடம் பேச்சுவார்த்தை நடந்தது. இந்தியா முழுவதும் படம் வெளியாக இருப்பதால் அனைத்து மொழி ரசிகர்களுக்கும் பரிட்சயமான நாயகியாக வேண்டுமென படக்குழு விரும்பியது. இறுதியாக, கியாரா அத்வானி நாயகியாக ஒப்பந்தமாகியிருக்கிறார்.



மேலும் ஒரு நாயகிக்காக தெலுங்கு நடிகை ராஷ்மிகா மந்தனாவிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இப்போதைக்கு, தெலுங்கின் முன்னணி நடிகையான இவரை, ஷங்கர் படத்தில் நடிக்க வைக்க விரும்பினார்கள். ஆனால், பெரும் தொகையை சம்பளமாகக் கேட்டிருக்கிறார் ராஷ்மிகா. அதோடு, சில கட்டுப்பாடுகளும் போட்டதாகத் தெரிகிறது. இதனால், இயக்குநர் ஷங்கர், ராஷ்மிகாவை நிராகரித்துவிட்டாராம். பின்னர், ராஷ்மிகா ரோலுக்கு நடிகை அஞ்சலியை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

## விஜய் தொலைக்காட்சியில் அதிக பட்ஜெட்டில் தயாராவது இந்த சீரியலா?

பிரம்மாண்டமாக இருக்க வேண்டும் என அதிக பட்ஜெட்டில் படங்கள் தயாராவது வழக்கம்.

அப்படி பெரிய பட்ஜெட்டில் தயாரான நிறைய படங்களை நாம் பார்த்திருப்போம். இப்போது அந்த பிரம்மாண்டத்தை சீரியலில் காட்டி வருகிறார்கள் சிலர்.

ஒருசில சீரியல்கள் சிறிய பட்ஜெயட்டில் தயாரானாலும் கதையில் பெரிய ரீச் பெற்றிருக்கும்.

விஜய் தொலைக்காட்சியில் நிறைய ஹிட் சீரியல்கள் உள்ளது. அதில் மௌன ராகம் சீரியலும் ஒன்று. இந்த சீரியல் தான் விஜய்யில் ஒளிபரப்பாகும் சீரியல்களில் அதிக பட்ஜெட்டில் தயாராகும் சீரியலாம்.

படப்பிடிப்பு முழுவதும் கேரளாவில் நடக்கிறது. வீடு, காட்டப்படும் இடங்கள் எல்லாமே சீரியலில் படு பிரம்மாண்டமாக இருக்கும்.



## வெப் தொடரில் நடிக்க ஆர்வம் காட்டும் நடிகைகள்

முன்னணி நடிகைகளாக வலம் வருபவர்கள் திரைப்படங்களை விட வெப் தொடர்களில் நடிக்க அதிக ஆர்வம் காண்பித்து வருகிறார்கள். வெப் தொடரில் நடிக்க சமீபகால கதாநாயகிகள் அனைவரும் ஆர்வம் காட்டுகிறார்கள். காரணம், சினிமாவை விட வெப் தொடர்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுக்கிறார்கள். வெப் தொடர்களுக்கு தணிக்கை கிடையாது. படுகவர்ச்சியான வசன ங்களும், ஆபாசமான காட்சிகளும் வெப் தொடர்களில் அனுமதிக்கப்படுகின்றன. படுக்கை அறை காட்சிகள் தாராளமாக இடம்பெறுகின்றன. இதற்காகவே அதில் நடிக்கும் நடிகர்-நடிகைகளுக்கு கூடுதல் சம்பளம் கொடுக்கிறார்கள்.

அதிக சம்பளம் என்ற வசிய வலையில் சிக்கி, படுகவர்ச்சியாக நடித்துள்ள கதாநாயகிகள் வருமாறு:-

1. சமந்தா. இவர், 'பேமிலி 2' என்ற வெப் தொடரில் படுகவர்ச்சியாக நடித்து இருக்கிறார்.

2. ரெஜினா கசன்ட்ரா. பெண்ணும் பெண்ணும் உறவு கொள்கிற 'லெஸ்பியன்' கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

3. அமலாபால். தன்னை விட பல வயது மூத்த ஒரு ஆணுடன் உறவு வைத்துக் கொள்கிற பெண்ணாக, ஒரு வெப் தொடரில் நடித்து வருகிறார். (அமலாபால், ஏற்கனவே மாமனாருடன் உறவு கொள்ளும் மருமகளாக 'சிந்து சமவெளி' படத்தில் நடித்து இருந்தார்.)

இந்த மூன்று பேரும் வெப் தொடர்களில் தொடர்ந்து நடிக்க ஆர்வம் காட்டி வருகிறார்கள்.





# பல்சுவை கதம்பம்



## மொறு மொறு சுவையில் உருளைக்கிழங்கு சிப்ஸ்..!

**தேவையான பொருட்கள்**

**உருளைக்கிழங்கு – 5**
**உப்பு – 1 ஸ்பூன்**
**மிளகாய் தூள் – 1 ஸ்பூன்**
**எண்ணெய் – பொறிக்க**



**செய்முறை :**

உருளைக் கிழங்குகளை தோல் சீவிக்கொள்ளுங்கள். பின் உருளைக்கிழங்களை சீவ சீவல் கருவி பயன்படுத்தி மெல்லியதாக சீவிக்கொள்ளுங்கள்.

அடுத்ததாக அதை தண்ணீரில் இரண்டு முறை அலசுங்கள்.

பின் காற்றோட்டமாக துணி விரித்து உருளைக்கிழங்குகளை ஒட்டாமல் காய வைய்யுங்கள். ஈரம் போனதும் எடுத்துக்கொள்ளுங்கள்.

அடுத்ததாக உப்பு ஒரு ஸ்பூன் மற்றும் தண்ணீர் கொஞ்சம் சேர்த்து கரைத்துக் கொள்ளுங்கள்.

கடாயில் எண்ணெய் விட்டு எண்ணெய் நன்குக் காய வேண்டும். காய்ந்ததும் சீவி வைத்துள்ள உருளைக்கிழங்குகளை போடுங்கள்.

அடுத்ததாக கலக்கி வைத்துள்ள உப்பு தண்ணீர் கொஞ்சம் எண்ணெய்யிலேயே சுற்றி ஊற்றுங்கள். எண்ணெய் தெரிக்காதவாறு தள்ளி நின்று ஊற்றுங்கள். இது சிப்ஸில் உப்பு ஏறவே இந்த ஸ்டெப்

அடுத்ததாக சீவல் நன்கு மொறு மொறுவென வரும் வரை பொறித்துகொண்டே இருங்கள். க்ரிஸ்பியாக வந்ததும் எடுத்துவிடுங்கள்.

இப்படி எல்லாவற்றையும் செய்ததும் பெரிய பவுலில் போட்டு மிளகாய் தூள் தூவி குளுக்குங்கள். தேவைப்பட்டால் பெருங்காயத்தூளும் போடலாம்.

அவ்வளவுதான் மொறு மொறு உருளைக்கிழங்கு சிப்ஸ் தயார்.

## உதடு சிவப்பா மாறணுமா? உங்கள் வீட்டிலுள்ள சீனியுடன் இதை கலந்து போடுங்கள்

பொதுவாகவே தங்களது முகம் வெள்ளையாக இருக்கிறதோ இல்லையோ உதடு சிவப்பாக இருக்க வேண்டும் என்று பெண்களும் சரி ஆண்களும் சரி விரும்புவது வழக்கம் தான். ஆனால், உதட்டை சிவப்பாக்குவதற்கு உதட்டு சாயம் பூசுவது தற்காலிகமானது. நிரந்தரமாக உதட்டுச் சாயம் பூசாமல் நம்முடைய உதடு சிவப்பாக இருக்க வேண்டுமானால் நாம் எந்த ஒரு கிரீம்களையோ, செயற்கையான மருந்துகளை உபயோகிக்க தேவையில்லை. வீட்டிலுள்ள சீனி மட்டும் போதும் எப்படி செய்ய வேண்டும் என்பதை பார்ப்போம்.


**தேவையான பொருள்கள்**

**சீனி தேவையான அளவு**
**ஒரு டீஸ்பூன் தேன்**
**சிறிதளவு எலுமிச்சை சாறு**

**செய்முறை**
ஒரு சின்ன பவுலில் ஒரு டீஸ்பூன் தேன் மற்றும் சிறிதளவு எலுமிச்சை சாறு விட்டு கிளறி அதனுடன் சீனியை போட்டு சற்று நேரம் கிளற வேண்டும்.

சீனி மணல் போல இருக்கும் பொழுது அதை உதட்டில் எடுத்து முழுவதும் பூச வேண்டும். பூசி பின்பு ஒரு இரண்டு நிமிடங்களுக்கு மேல் இருந்து கீழாக மசாஜ் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

பின் இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக என்று மாற்றி மாற்றி ஒரு இரண்டு நிமிடங்களுக்கு மட்டும் மசாஜ் செய்தால் போதும். அதன் பின்பு உதட்டை கழுவி விட வேண்டும். இதே போல ஒரு தொடர்ந்து ஒருவாரத்திற்கு செய்து வந்தால் நிச்சயமாக உங்களுக்கு நீங்கள் விரும்பும் சிவப்பு நிற உதட்டிற்கும் அதிகமான அழகிய நிறத்தில் மாறும்.





## வெயிலில் செல்லும் போது சருமம் எரிகிறதா? இதோ அதைத் தடுக்க சில வழிகள்!

சாதாரண வெயிலில் சுற்றும் போது சிலருக்கு சருமம் பயங்கரமாக எரியும். அதிலும் கோடையில் என்றால் தாங்க முடியாத அளவில் எரிச்சலை சந்திக்க நேரிட்டு, சருமத்தின் நிறம் கருமையாகும். இதனைத் தவிர்க்க வேண்டுமானால், கோடையில் சருமத்தை குளிர்ச்சியுடன் வைத்துக் கொள்ளும் பொருட்களைக் கொண்டு சருமத்தைப் பராமரிக்க வேண்டும்.

வெள்ளரிக்காய் மற்றும் எலுமிச்சை

வெள்ளரிக்காயை அரைத்து, அத்துடன் சிறிது எலுமிச்சை சாறு, 1 சிட்டிகை மஞ்சள் தூள் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி உலர வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். முக்கியமாக இந்த ஃபேஸ் பேக் எண்ணெய் பசை சருமத்தினருக்கு ஏற்ற ஒன்று.

வெள்ளரிக்காய் மற்றும் முல்தானி மெட்டி

முல்தானி மெட்டி பொடியில் வெள்ளரிக்காய் சாறு மற்றும் ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்ததும், குளிர்ந்த நீரினால் முகத்தைக் கழுவ, முகத்தில் உள்ள பருக்கள் அனைத்தும் நீங்கும்.

வெள்ளரிக்காய் மற்றும் தேன்

வெள்ளரிக்காயை அரைத்து, அத்துடன் ஓட்ஸ் பொடி மற்றும் தேன் சேர்த்து கலந்து முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இந்த ஃபேஸ் பேக் சருமத்தில் நீர்ச்சத்தை தங்க வைத்து, சருமம் வறட்சியடைவதைத் தடுக்கும்.

வெள்ளரிக்காய் மற்றும் ஆப்பிள்

ஆப்பிளை அரைத்து, வெள்ளரிக்காய் சாறு சேர்த்து கலந்து, முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து, குளிர்ச்சியான நீரால் முகத்தைக் கழுவவும். இந்த ஃபேஸ் பேக் சென்சிடிவ் சருமத்தினருக்கு ஏற்ற ஒன்று.

வெள்ளரிக்காய் மற்றும் கற்றாழை

வெள்ளரிக்காயை சாறு எடுத்து, அத்துடன் கற்றாழை ஜெல் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து தினமும் கழுவி வர, முகத்தில் உள்ள கருமைகள் அகலும்.

வெள்ளரிக்காய் மற்றும் அவகேடோ

வெள்ளரிக்காயை அரைத்து, அத்துடன் அவகேடோ பழத்தை சேர்த்து நன்கு கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவ, முகம் புத்துணர்ச்சியுடனும், வறட்சியின்றியும் பொலிவோடு காணப்படும்.

# இலங்கை கடனை திருப்பி செலுத்தத் தவறினால், சொத்துகளை சீனாவிற்கு எழுதிக் கொடுக்க வேண்டிய நிலை!



சீனாவிடமிருந்து இலங்கை கடந்த 17ஆம் திகதியன்று 61.5 பில்லியன் இலங்கை ரூபாய் (6150 கோடி இலங்கை ரூபாய்) மதிப்பிலான கடனுதவியை உடன்படிக்கையொன்றின் ஊடாக பெற்றுக்கொண்டுள்ளது.

இலங்கைக்கான சீன தூதரகம் தனது ட்விட்டர் பக்கத்தில், பதிவொன்றின் ஊடாக இந்த தகவலை வெளியிட்டிருந்தது. இலங்கையின் கோரிக்கைக்கு அமையவே இந்த கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடனால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கும் என்ற விமர்சனம் எழுந்துள்ள அதே வேளையில், வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்தவே கடன் வாங்கப்பட்டுள்ளது என்று இலங்கை அரசு தெரிவிக்கிறது.

கோவிட் ஒழிப்பு நடவடிக்கைகள், பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த கடன் வழங்கப்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

இலங்கையில் கோவிட் தொற்று பரவ ஆரம்பித்த காலம் முதல், நாடு பாரிய பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாக ஆளும் தரப்பு அனைத்து சந்தர்ப்பங்களிலும் தெரிவித்து வருகின்றது.

இலங்கையின் பிரதான வருமான வழியான சுற்றுலாத்துறை, 2020ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் முழுமையாகவே பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய வருமான வழிகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அந்நிய செலாவணி வருமானங்களும் குறைவடைந்துள்ளன.

இதனால், இலங்கை அரசாங்கம் பாரிய பொருளாதார வீழ்ச்சிகளை சந்தித்து வருவதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்ற நிலையிலேயே, இந்த கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடனில் சிக்கித் தவிக்கும் இலங்கை சீனாவிடமிருந்து அரசாங்கம் அவசரமாக இந்த கடனை பெற்றுக் கொண்டமை குறித்து, பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீட பேராசிரியர் சங்கரன் விஜயச்சந்திரனிடம் பிபிசி தமிழ் வினவியது.

நாடொன்றிற்கு குறைந்தது மூன்று மாத காலத்திற்கு தேவையான அந்நிய செலாவணி இருப்பு இருக்க வேண்டும் எனவும், ஆனால் இலங்கை வசம் தற்போது அந்நிய செலாவணி இருப்பு கிடையாது. இதனால், கடனொன்றை பெற்றுக்கொள்ளும் போது, அந்நிய செலாவணி இருப்பு அதிகரிக்கும் என கூறிய அவர், அதனூடாக ரூபாயின்பெறுமதி வீழ்ச்சியை கட்டுப்படுத்திக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

தற்போது இலங்கை அரசாங்கத்திற்கு வரி வருமானங்கள் குறைவடைந்து, ஏற்றுமதி குறைவடைந்து, சம்பளத்தை கூட வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய வெளிநாட்டு கடன்களின் அளவு அதிகரித்துள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர், பெருமளவிலான கடன் தொகையை செலுத்த வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல் நடத்துவதற்கு தயாராகி வருகின்றமையினால், கீழ் மட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி பணிகளை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாக பேராசிரியர் சங்கரன் விஜயசந்திரன் தெரிவிக்கின்றார்.

இலங்கையில் கோவிட் பரவல் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில், அதனை கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வர எந்தவொரு தரப்பும் உதவிகளை செய்ய முன்வராத காரணத்தினால், இவ்வாறான கடன்களின் ஊடாக பங்களிப்புக்களை செய்ய முடியும் என அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

**குறைந்த காலம் அதிக வட்டி'**

சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கடன் தொகைக்கு வட்டி வீதம் அதிகம் எனவும், குறுகிய காலத்தில் இந்த கடனை செலுத்த வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார்.



அவ்வாறு குறுகிய காலத்தில் கடன் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில், நாட்டிலுள்ள சொத்துகளை சீனாவிற்கு எழுதி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

அவ்வாறு இல்லையென்றால், பல்வேறு தேவையற்ற ஒப்பந்தங்களுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என அவர் தெரிவிக்கின்றார்.

சர்வதேச செலாவணி நிதியம் அல்லது உலக வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து கடனை பெற்றுக்கொள்ளும் போது பிரச்சனைகள் இருக்காது என கூறிய அவர், நாடொன்றிடமிருந்து கடன் வாங்கும் போது பிரச்சனை காணப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சீனா, மானியங்களை வழங்காது. கடன்களையே வழங்கும் சீனா, தமது வர்த்தக நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே, இவ்வாறான கடன்களை வழங்குவதாகவும் பேராசிரியர் தெரிவிக்கின்றார்.

அதனால், சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் கடன் தொகையானது, இலங்கையை சீனாவின் ஆளுகைக்குள் வைக்கும் நிலைமையை ஏற்படுத்தும் என பேராசிரியர் சங்கரன் விஜயச்சந்திரன் குறிப்பிடுகின்றார்.

பொருளாதார ரீதியில் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ளும் வகையிலேயே இந்த கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சீன அரசாங்கத்திடமிருந்து பல்வேறு கடன்கள், அபிவிருத்தி திட்டங்களுக்கான முதலீடுகள் என பெருந்தொகையான பணத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

**அரசு என்ன கூறுகிறது?**

குறிப்பாக இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கான ஒப்பந்தமொன்றில் இலங்கை அரசாங்கமும், சீன அபிவிருத்தி வங்கியும் கைச்சாத்திட்டிருந்தன.

இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகம், ஹம்பாந்தோட்டை விமான நிலையம், தெற்கு அதிவேக வீதி, கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நகர் உள்ளிட்ட மேலும் பல திட்டங்களை சீன அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறான நிலையில், இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாகவே சீனாவிடமிருந்து கடன்களை பெற்று வருகின்றது.

குறிப்பாக சீனாவிடமிருந்து 10 பில்லியன் Athid (சுமார் 1.5 பில்லியன் டொலருக்கு நிகரானசீனபணம்)பெற்றுக்கொண்டுள்ளதாக மே மாத இலங்கை மத்திய வங்கியின் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளும் வகையிலேயே தாம் வெளிநாடுகளிடமிருந்து கடன்களை பெற்றுக்கொள்வதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

குறிப்பாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு இடையில் வருடாந்தம் சுமார் 8 பில்லியன் ரூபா வரை இடைவெளியொன்று காணப்படுகின்றமையினால், இந்த காலப் பகுதியில் அதனை ஈடு செய்துக்கொள்வதற்காக இறக்குமதி இயலுமான வரை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். சுற்றுலா துறை, வெளிநாடு பணியாளர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளிலேயே அதனை இதுவரை காலமும் ஈடு செய்து வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த மூன்று விதமான வருமானங்களும், கொவிட் நிலைமைக்கு மத்தியில் இன்று பூஜ்ஜியமாகியுள்ளதெனவும் அவர் தெரிவிக்கின்றார்.

இந்த இடைவெளியை நிரப்புவதற்காக இயலுமான வரை இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ள போதிலும், அதனையும் ஈடு செய்துக்கொள்ள முடியாதமையினாலேயே கடன் பெற வேண்டிய நிலைக்கு தாம் தள்ளப்படுவதாகவும் அவர் கூறுகின்றார்.

சூழியோடி

# மங்கள சமரவீர ஒரு உண்மையான தேசபக்தர். இரான் விக்ரமரத்ன எம்.பி.

மங்கள சமரவீரவை பலரும் விரும்பினர். ஆனால் ஒரு சிலர் அவரை விரும்ப வில்லை. அவரது தாராளவாத பார்வையில் உடன்படாத பலர் இருந்தனர் ஆனால் அவர்களை மிரட்டாமல் உரை யாடலை ஏற்றுக்கொண்டனர். அவர் தனது உலகக் கண்ணோட்டத்தை ஆணையிட பிரபலமான கோரிக்கைகளை அனுமதித் தவர் அல்ல. மாறாக, சமூக விதிமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை அவர் கேள்வி எழுப்பினார்.

மங்கள உண்மையாகவே, அர்த்தத்தில் ஒரு சீர்திருத்தவாதி.. அரசாங்கத்திற்கு அப்பாற் பட்ட நிறுவனங்களை கட்டியெழுப்பவும், இலங்கையில் மக்கள் கௌரவமான வாழ்க்கை வாழ உதவுவதற்கும் அவர் தன்னை அர்ப்பணித்தார்மங்கள அச்சுறுத்தல்கள் அல்லது அவரது பதவி நிலை மூலம் அல்ல ஆனால் பேச்சு வார்த்தைகளின் மூலமே ஆளுமை செய்தார். அவர் நிபுணர்களைக் கேட்டு, அவருடைய தீர்ப்புக்கு எதிரான அவர்களின் ஆலோசனையை மதிப்பீடு செய்து தனது முடிவை எடுத்தவராவார்.. அவர் எப்பொழுதும் தான் எடுத்த முடிவுகளின் உரிமையை தன்னகத்தே கொண்டார் மற்றும் காலப்போக்கில் அதன் விளைவு களையும் பிரதிபலித்தார். மங்களா தனது 30 ஆண்டு கால நீண்ட அரசியல் வாழ்க்கை யில் பல அழிக்க முடியாத சாதனைகளை படைத்துள்ளார்.

இலங்கை தொலைத்தொடர்பு துறையின் தாராளமயமாக்கல் மங்களவின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும்.. இன்று, இலங்கையில் உள்ள அனைத்து அரசுடைமை நிறுவனங்களிலும் SLT மிகவும் இலாபகரமானதாகும் 1990 களில் மங்கள அதை நவீனப்படுத்த தலைமை தாங்கியதோடு, தொழிற்சங்கங்களுடன் இணைந்து பணியாற்றவும், புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டுவரவும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைக்கவும் வழி செய்தார்.

2017-2019 வரை நிதி அமைச்சில் மங்களவுடன் நெருக்கமாக பணியாற்றிய பெருமை எனக்கு இருக்கின்றது. இவ்வளவு சக்திவாய்ந்த அமைச்சுப் பதவி இருக்கும் போது பலர் ஊழல் செய்ய முடியும். மங்கள திறைசேரியை மீண்டும் கட்டவும், நிதி அமைச்சரின் அதிகாரத்தையும் விருப்பத்தையும் குறைக்கவும் வாய்ப்பைப் பயன்படுத்தினார். வரி அடிப்படையை விரிவாக்க உள்நாட்டு வருமான வரி சட்டம் 2017 ஐ நாங்கள் நிறைவேற்றினோம். பணம்சம்பாதிப்பவர்கள்தங்கள்நியாயமான வரிகளை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்ற கருத்தை நாங்கள் இருவரும் பகிர்ந்து கொண்டோம். ஆனால் மறுபுறம், ஒவ்வொருவரும் தங்கள் பங்கிற்கு நியாயமாக தங்கள் தொழிலைச் செய்வதற்கான தடைகளைக் குறைக்க நாங்கள் வேலை செய்தோம். சாதனை களில் ஒன்று 2017 மற்றும் 2018 இல் அடைந்த முதன்மை நிலுவை மிகையாகும். இவ் மிகை - 1954 மற்றும் 1955 களின் மீழ் நிகழ்வுகள் ஆவதோடு சர்வதேச முதலீட்டாளர்களிடையே எங்கள் நம்பகத் தன்மையை அதிகரித்ததோடு இலங்கை கடன் வாங்குவதற்கான செலவையும் குறைத்தது. நாட்டில் பெட்ரோலிய நுகர்வு மக்களுக்கு வெளிப்படையான விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தியது மற்றொரு மைல்கல் ஆகும்.

மத்திய வங்கியுடனான எங்கள் தொடர்பு வலுவானது, விவாதத்திற்குரியது மற்றும் தொழில்முறை சார்ந்ததாக இருந்தது.. மத்திய வங்கியின் சுதந்திரத்தை மங்கள எப்போதுமே மதிக்கிறார் என்பதற்கு அப்போதைய ஆளுநர் டாக்டர் இந்திரஜித் குமாரசாமி, செயலாளர் டாக்டர் சமரதுங்கா மற்றும் மூத்த மத்திய வங்கி அதிகாரிகள் சான்றளித்தனர்.. மங்கள பிரபலமல்லமானது அல்லாத ஆனால் சிறந்த பாரிய பொருளாதார ஆலோசனையிலிருந்து பின்வாங்க வில்லை. மிகுந்த உள் வலிமை கொண்ட மனிதன்.

இலங்கையின் அரசியல் சூழலை சீர்திருத்த மங்கள போராடினார். 1994, 2005 மற்றும் 2015 ல் ஆட்சியை மாற்றியதில் அவரது பங்கு குறித்து பலரும் கருத்து தெரிவித் துள்ளனர். சிவில் சமூகம் மற்றும் அரசியல் சக்திகளுக்கு இடையே நம்பிக்கையையும் நட்பையும் வளர்க்கும் தனித்துவமான திறனை மங்கள கொண்டிருந்தார்.

கொழும்பை அழகுபடுத்துவதற்கான ஆரம்ப முயற்சிகளுக்கு மங்கள தலைமை தாங்கினார். ஒரு நாள், நானும் மங்களாவும் காலி முகத்திடல் வழியாகச் செல்லும்போது, அவரின் கீழ் இருந்த நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடப்பட்ட பனை மரங்கள் வேரோடு பிடுங்கப்படுவ தைக் கண்டார். மங்களா என் பக்கம் திரும்பி, காலி முகத் திடல் சூரிய ஒளி படும் பகுதி என்பதால் அவர்கள் பனை வளர்ப்பைத் தேர்ந்தெடுத்ததாகக் கூறினார்.. பனை மரம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் அடையாளமாகையால் அது மாற்றப் படுவதற்காக மரங்கள் அகற்றப்படுவதாக இருக்கலாம் என அவர் சுட்டிக்காட்டினார்.. "நாங்கள் பிராந்திய ஒருமைப்பாடு பற்றி பேசுகிறோம். நாங்கள் ஒரு நாடு பற்றி பேசுகிறோம். எவ்வாறாயினும், எங்கள் நாட்டின் வடக்கை நாங்கள் இன்னும் கடுமையாக நிராகரிக்கிறோம். மங்கள எப்பொழுதும் ஐக்கிய இலங்கைக்கு ஆதரவாக இருந்தார். இன, சாதி, மத வேறுபாடின்றி, மக்கள் அமைதியுடனும், கௌரவத்துடனும் வாழக்கூடிய நாட்டை உருவாக்க அவர் முயன்றார். ஒளியியல் அல்லது அமானுஷ்யத்தின் அடிப்படையில் அல்லாமல் சான்றுகள் மற்றும் பகுத்தறிவின் அடிப்படையிலும் முடிவுகளை எடுக்க அவர் தூண்டப்பட்டார்.

மங்களவுடனான எனது உறவு ஒரு தொழில்முறை உறவாகத் தொடங்கியது ஆனால்காலப்போக்கில்அதுஇலங்கையைப் பற்றிய நமது பகிரப்பட்ட பார்வையின் அடிப்படையில் ஒரு சிறந்த நட்பாக வளர்ந்தது. மங்கள பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியவுடன், அவருடைய பொல்கொட ஏரி வீட்டில் எங்கள் நட்பும் உரையாடலும் தொடர்ந்தது. அவர் தனது முயற்சிகள் மற்றும் அவரது எதிர்காலம் பற்றி எனக்கு விளக்கினார். அவர் பொழுதுபோக்கிற்காக அவர் விரும்பிய திறந்த வீடு, மகிழ்ச்சியான இயல்பை தெளிவாக எடுத்து இயம்பியது..

மங்கள நேர்மையானவர் அனைவரையும் மதிக்கக் கூடிய மற்றும் நவீன காலத்தின் மிகவும் தைரியமான அரசியல்வாதி. மங்கள உங்கள் நோக்கு இழக்கப் படவில்லை எனினும் உங்கள் நேரடி நடத்தை, உங்கள் நட்பை இழந்தி டுவோம் உங்கள் அரசியல் பயணத்தில் நீங்கள் பலருக்கு அளித்துள்ள தைரியம் இலங்கையில் தொடர்ந்தும் தாக்கம் செலுத்தும்.

# மங்களவின் மறைவினால் கடும் வேதனையில் முன்னாள் ஜனாதிபதி

அன்புக்குரிய மங்கள, என் நண்பர், சகோதரர்.. இந்த இருண்ட நாளில் நீங்கள் உங்கள் வாழ்க்கையை இழந்து விட்டீர்கள். உங்களுக்காக நாங்கள் பிரார்த்தனைகள் செய்தோம். கண்ணீர் விட்டோம். ஆனால் அனைத்தும் தோற்றுப் போனது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கொரோனா தொற்றுக்கு இலக்காகி மரணமடைந்தார். அவரது உடல் பொரள்ளை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

சர்வதேச இராஜதந்திரிகள், இலங்கை அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் மங்களவின் மறைவிற்கு தமது அனுதாபங்களை வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையில் மங்கள சமரவீரவின் நெருங்கிய நண்பரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்க தனது அனுதாபங்களை வெளியிட்டுள்ளார்.

தனது மிக நீண்ட கால நண்பரான மங்கள சமரவீர கொரோனா தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறும் சமயம் விரைவில் அவர் நலம் பெற்று வரவேண்டும் என பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில் மங்கள சமரவீர உயிரிழந்த பின்னர் அவரின் உடலை தகனம் செய்ய கொண்டு சென்ற போது பொரள்ளை பொது மயானத்தின் வெளியே சோகமே உருவாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா நின்றிருந்தமை பார்ப்பவர்களின் மனதை மிக வேதனைக்குள்ளாக்கி யுள்ளது.

மங்கள சமரவீரவின் மறைவு தொடர்பில் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிடுகையில்,

மங்கள, நீங்கள் இன்னும் இறக்கவில்லை. இலங்கையை கட்டியெழுப்ப முன்னெடுக்கப் படும் ஒவ்வொரு போராட்டத்திலும் நீங்கள் உயிர்வாழ்வீர்கள்.

அநீதி மற்றும் ஊழலுக்கு எதிராக நிற்கும் அனைவரின் இதயங்களிலும் செயல்களிலும் நீங்கள் வாழ்வீர்கள்.

பல்வேறு அமைச்சு பதவிகளில் நீங்கள் செய்த மகத்தான சேவையை நான் எப்போதும் நினைவில் கொள்வேன் என குறிப்பிட்டுள்ளார்.









# அறிவியல் உலகம்



## உலகின் மிகச் சிறிய மின் தேக்கிகள்!


ஜெர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானிகள், 'சூப்பர் கெப்பாசிட்டர்' எனப்படும் மிகு மின்தேக்கிகளை உருவாக்கியுள்ளனர். இவை தான் இன்றைய தேதிக்கு, உலகின் மிக நுண்ணிய அளவிலான மின் தேக்கிகள்.

ஒரு தூசித் துணுக்கு அளவே உள்ள பல மின் தேக்கிகளை தொகுத்து இணைக்கப்பட்ட சிறிய கருவி இது. ஒரு ஏ.ஏ.ஏ., மின் கலனுக்கு இணையான மின் ஆற்றலை வழங்கும் திறன் கொண்டதாக இது உள்ளது.ஜெர்மனியிலுள்ள கெம்னிட்ஸ் தொழில்நுட்ப பல்கலைக்கழக விஞ்ஞானிகள், வேறு சில அமைப்புகளுடன் இணைந்து, இந்த மிகு மின்தேக்கிகளை உருவாக்கியுள்ளனர்.

இவை, மனித உடலுக்குள் பதிப்பதற்கு ஏற்ற பொருட்களால் தயாரானவை. மேலும், மனித ரத்தத்தின் வேதியியல் தன்மையிலிருந்தே மின்சாரத்தையும் உற்பத்தி செய்யும் திறன் படைத்தவை. கெம்னிட்ஸ் விஞ்ஞானிகள் இச்சிறு கருவியை, ஆய்வகத்தில் ரத்தம், ரத்த பிளாஸ்மா மற்றும் உப்பு நீர் ஆகியவற்றில் வைத்து இயக்கிப் பார்த்து, அதன் திறனை உறுதி செய்துள்ளனர்.

மின்னேற்றம் பெற்ற மின் தேக்கிகள், 16 மணி நேரத்திற்கும் மேலாக மின்சாரத்தை தேக்கி வைத்து அசத்தியுள்ளன.அளவில் மிகச் சிறிய மிகு மின் தேக்கிகள், உடலுக்குள் பதிக்கப்படும் மருத்துவ நுண் கருவிகளுக்கு மின்சாரம் வழங்க பயன்படும். இதற்காகவே, ரத்த நாளத்திற்குள், ரத்த அழுத்தம், ரத்த ஓட்ட வேகம் ஆகியவற்றைத் தாக்குபிடிக்கின்றனவா என்ற சோதனையையும் விஞ்ஞானிகள் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர்.

அதுமட்டுமல்ல, ரத்தத்தின் வேதிமாற்றத்தை அளக்கும் உணரிகளுக்கு மின்சாரத்தைவழங்கவும் மிகுமின் தேக்கிகளை பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளனர்.




## உலகின் முதல் பசுமை எக்கு தயார்!

பெட்ரோலியம் சார்ந்த பொருட்கள் துளியும் பயன்படுத்தாமல் எக்கு தயாரிக்க முடியுமா? சுவீடனைச் சேர்ந்த எஸ்.எஸ்.ஏ.பி., குழுமத்தின் எக்கு ஆலை, அது முடியும் என்று காட்டியிருக்கிறது.

உலக மாசுபாட்டில், சுரங்கத்தில் தாது எடுப்பது, அதை வாகனத்தில் கொண்டு வருவது, பிறகு ஆலையில் எக்கு உற்பத்தி என்று அனைத்திலும் பெட்ரோலியத்திற்கு கணிசமான பங்கு உண்டு. இந்த நிலையில், சுற்றுச்சூழல் மீது கார்பன் சுமையை சுமத்தாமல் எஸ்.எஸ்.ஏ.பி., குழுமம் எக்கு தயாரித்திருப்பது உலக சாதனை தான்.சுவீடனின் பெரும் தொழிற்குழுமமான எஸ்.எஸ்.ஏ.பி., அடுத்த சில ஆண்டுகளில் பசுமை நிறுவனமாக மாற திட்டமிட்டுள்ளது.

அதன் துவக்கமே, பெட்ரோலியம் சாரா எக்கு உற்பத்தி.இதற்கென அக்குழுமம், 'ஹைபிரிட்' என்ற உற்பத்தித் தொழில்நுட்ப முறையை உருவாக்கியுள்ளது. அதன்படி, சரக்கு வாகன போக்குவரத்து, ஆலை எரிபொருள் உட்பட பல பகுதிகளில் ஹைட்ரஜனே எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. மேலும், தாதுக்களை உருக்கிக் கலக்கும் எரிகலனுக்கு, மின்சாரமே பயன்படுத்தப்படுகிறது.இப்படி வெற்றிகரமாக உருவாக்கப்பட்ட முதல் பசுமை எக்கை, 'வால்வோ கார்' தொழிற்சாலை அண்மையில் வாங்கத் துவங்கியிருக்கிறது. இதே போல, சிமென்ட் போன்ற பிற தொழில்துறைகளும் பின்பற்றினால், பூமி விரைவில் பசுமைப் பந்தாக மாறும்.




## வந்துவிட்டது செயற்கை செவிப்பறை!

காதில் உள்ளே இருக்கும் செவிப்பறையில் துளை விழுந்தால் சீக்கிரம் நோய் தொற்று ஏற்படலாம். அடுத்து காது வலி வரும் செவித்திறன் பாதிக்கப்படும். இதற்கு அறுவை சிகிச்சை மூலம் செவிப்பறையை சரி செய்ய முயற்சி செய்யப்படுகிறது. ஆனால் வெற்றி வாய்ப்பு குறைவு.

எனவே தான், அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டு பல்கலை விஞ்ஞானிகள், உயிரி பாலிமர்களை கொண்டு, 'போனோகிராப்ட்' என்ற ஒரு செயற்கை செவிப்பறையை உருவாக்கி உள்ளனர். விலங்கு சோதனைகளில், போனோகிராப்ட் ஒரு செவிப்பறையை போல செயல்பட்டு, காது கேட்கும் திறனை பழைய நிலைக்கு கொண்டு வர உதவுவது தெரிய வந்துள்ளது. அதோடு, இயற்கையாக உள்ள செவிப்பறை இயல்பாக வளர்ந்து துளை அடைபடுவதற்கு சாரமாகவும் போனோகிராப்ட் இருக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, வலிமிக்க அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் போனோகிராப்டை பயன்படுத்துவதில் இல்லை. காரணம், போனோகிராப்டை நேரடியாக காதுக்குள் செலுத்தி பொருத்திவிட முடியும்.தற்போது, ஹார்வர்டு விஞ்ஞானிகள் போனோகிராப்டை சந்தைக்கு கொண்டு வர ஏற்பாடு செய்துள்ளனர். விரைவில், செவிப்பறை பாதித்தோருக்கு விடிவு கிடைக்கும்.



## உலகின் பலமிக்க கண்ணாடி

கண்ணாடியை வெட்டுவதற்கு வைர முனையை பயன்படுத்துவர். ஆனால், அத்தனை உறுதியான வைரத்தின் மீதே கீறலை ஏற்படுத்துமளவுக்கு உறுதியான கண்ணாடியை சீன விஞ்ஞானிகள் படைத்துள்ளனர்.

யான்ஷான் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், உலகின் மிக வலுவான கண்ணாடியை உருவாக்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளனர். வைரத்தையே பிளக்குமளவுக்கு பலத்தையும், ஒளி ஊடுருவும் தன்மையும் கொண்டதாக அந்தக் கண்ணாடி உள்ளது.

'ஏ.எம்., 3' என்று பெயரிடப்பட்டுள்ள இக்கண்ணாடிக்கு இன்னொரு பலமும் உண்டு. இது ஒரு குறைமின் கடத்தியாகவும் செயல்படும் திறன் கொண்டது. எனவே, சூரிய மின் தகடுகளில் ஏ.எம்.,3யை பயன்படுத்த முடியும் என யான்ஷான் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மனிதனால் உருவாக்கப்பட்ட ஏ.எம்.,3 கண்ணாடியை அணிகலனாகவும், பூமியை அலங்கரிக்கும் சூரிய மின் பலகைகளாகவும் தயாரிக்க முடிவது, ஆச்சரியமான செய்தி தான்.



வாழ்க்கைக்குப் பிறகு, கடவுள் தந்த மிகப் பெரிய கொடைகளுள் ஒன்று தான் தொழில்நுட்பம். அதுவே, நாகரிகத்திற்குள், கலைக்கும், அறிவியலுக்கும் தாய்.

பிரீமேன் டைசன்
ஆங்கிலேய கணித இயற்பியலாளர்



# விளையாட்டு செய்திகள்

## டோக்கியோ பாராலிம்பிக் ஆரம்பம்

ஜப்பானின் டோக்கியோ நகரில் 16 ஆவது பாராலிம்பிக் போட்டிகள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாரப்பூர்வமாக ஆரம்பமாகியுள்ளன. வரும் செப்டம்பர் 5 ஆம் திகதி வரை 13 நாள்களுக்கு நடைபெறுகின்ற மாற்றுத்திறனாளிகளுக்கான இந்த பாராலிம்பிக்கில், விளையாட்டுப் போட்டிகள் இன்றிலிருந்து தொடங்குகின்றன.

டோக்கியோவில் உள்ள தேசிய மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் சர்வதேச பாராலிம்பிக் குழுவின் (ஐ.பி.சி.) தலைவர் அன்ட்ரூ பார்சன்ஸ், ஜப்பான் அரசர்நருஹிடோ, ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்ச்சியானது, எண்ண இயலாத துன்பங்களுக்கு இடையேயும் உயரப் பறக்கும் வகையில் மாற்றுத்திறனாளிகள் மேற்கொள்ளும் முயற்சிகளைச் சித்தரிக்கும் வகையில், 'எங்களுக்கும் சிறகுள்ளது' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது. நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் அதைச் சார்ந்தே இருந்தன.

நிகழ்ச்சியானது, பாராலிம்பிக் போட்டியாளர்களின் பலத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான காணொலி திரையிடப்பட்டதில் இருந்து தொடங்கியது. அதைத் தொடர்ந்து பாராலிம்பிக் போட்டிகள் தொடங்கியதை குறிக்கும் வகையில் மைதானத்திலிருந்து வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன. அதன் பிறகு பாராலிம்பிக் குழுவின் தலைவர், அரசர் நருஹிடோ ஆகியோர் மேடையில் தோன்ற, பாராலிம்பிக் போட்டிகள் தொடங்கியதாக அரசர் நருஹிடோ அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து ஜப்பானைச் சேர்ந்த பாராலிம்பிக் மல்யுத்த சாம்பியன் காவ்ரி இசோ உள்பட 6 பேர் ஜப்பான் கொடியை மேடைக்கு ஏந்தி வந்தனர். அதன் பிறகு கொடியேற்றப்பட்டது. பின்னர் பங்கேற்பு நாடுகளின் அணிவகுப்பு, அகதிகள் குழுவிலிருந்து தொடங்கியது. அதில் இஸ்ரேல் அணியினரை ஒரு வழிகாட்டி நாய் அணிவகுத்து நடத்தி வந்தது அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பதாக இருந்தது.



தலிபான்கள் ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவளிக்கும் வகையில், அந்த நாட்டின் தேசியக் கொடியும் அணி வகுப்பில் ஏந்தி வரப்பட்டது. அப்போது மைதானத்தில் கூடியிருந்தவர்கள் பலமான கரவொலி மூலம் அதற்கு வரவேற்புத் தெரிவித்தனர். நடப்பு அரசியல் சூழல் காரணமாக அந்த நாட்டிலிருந்து போட்டியாளர்கள் பங்கேற்க முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.

பாராலிம்பிக் போட்டியானது 57 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் டோக்கியோ நகரில் நடத்தப்படுகி றது. இதன் மூலம், பாராலிம்பிக் போட்டியை இரு முறை நடத்திய முதல் நகரம் என்ற பெருமை யை டோக்கியோ பெற்றுள்ளது. டோக்கியோ பாராலிம்பிக்கில் பங்கேற்கும் போட்டியாளர்கள் எண்ணிக்கை 4,403. கடந்த ரியோ பாராலிம்பிக்கில் பங்கேற்றோர் எண்ணிக்கையை விட (4,328) இது அதிகமாகும்.

## இம்முறை சீராஜை குறிவைத்த இங்கிலாந்து ரசிகர்கள்: வருத்தமடைந்த கோலி!

இங்கிலாந்து-இந்தியா இடையேயான 3வது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத் தின் போது பவுண்டரி அருகே பீல்டிங் செய்துகொண்டிருந்த சீராஜ் மீது ரசிகர்கள் பந்தை எறிந்ததை ரிஷப் பண்ட் வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

1-0 என இந்திய முன்னிலையில் உள்ள நிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான 3வது டெஸ்ட் போட்டி நேற்று ஆகஸ்ட் 25ம் தேதி உநுயுனுஐபேுடுநுலு மைதானத்தில் தொடங்கியது.

டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 78 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதைத்தொடர்ந்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, முதல் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 120 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்நிலையில் முதல் நாள் ஆட்டத்திற்கு பின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துக்கொண்ட இந்திய வீரர் ரிஷப் பண்ட், முதல் நாள் ஆட்டத்தின் போது பவுண்டரி அருகே பீல்டிங் செய்துக்கொண்டிருந்த சீராஜ் மீது ரசிகர்கள் பந்தை எறிந்ததை வெளிப்படுத்தியுள்ளார்.

சிராஜ் மீது யாரோ பந்தை ஏறிந்தார்கள், அதனால் கோஹ்லி மிகவும் வருத்தப்பட்டார்.

இங்கிலாந்து ரசிகர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் ஆனால் இந்திய பீல்டர்கள் மீது எதையும் வீசக்கூடாது.

இது கிரிக்கெட்டுக்கு நல்லதல்ல, நான் நினைக்கிறேன் என பண்ட் கூறினார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பவுண்டரி அருகே பீல்டிங் செய்துக்கொண்டிருந்த இந்திய வீரர் கே.எல்.ராகுல் மீது ரசிகர்கள் கார்க்கை வீசியது சர்ச்சையை ஏற்படுத்தியது நினைவுக் கூரத்தக்கது.

## கரீபியன் பிரீமியர் லீக்: ஆரம்ப போட்டிகளில் கயானா– சென்.கிட்ஸ் அணிகள் வெற்றி!

கரீபியன் பிரீமியர் லீக் ரி-20 தொடரின் ஆரம்ப போட்டிகளில் கயானா அமசோன் அணி மற்றும் சென்.கிட்ஸ் நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

நடப்பு தொடரின் முதல் லீக் போட்டியில், கயானா அமசோன் அணியும் ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணியும் மோதின.

சென்.கிட்ஸ் மைதானத்தில் அன்று (வியாழக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கயானா அமசோன் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 142 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஹெட்மியர் 54 ஓட்டங்களையும் ஓடீன் ஸ்மித் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சில், அகீல் ஹொசைன் மற்றும் நரேன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஜெய்டன் சீல்ஸ், ராம்போல் மற்றும் இசுரு உதான ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 143 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் கயானா அமசோன் அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றுது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, தினேஷ் ராம்தின் 28 ஓட்டங்களையும் டிம் செய்பர்ட் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கயானா அமசோன் அணியின் பந்துவீச்சில், ரொமாரியோ செப்பர்ட் 3 விக்கெட்டுகளையும் இம்ரான் தஹீர் மற்றும் ஓடீன் ஸ்மித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் நவீன் உல் ஹக் மற்றும் மொஹமட் ஹபீஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 24 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுகளையும் சாய்த்த ஓடீன் ஸ்மித் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடரின் இரண்டாவது லீக் போட்டியில், பார்படோஸ் றோயல்ஸ் அணியும் சென்.கிட்ஸ்- நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

சென்.கிட்ஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பார்படோஸ் றோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.கிட்ஸ்- நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணி, நிர்ணயிக்க ப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 175 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, செர்பேன் ருத்தர்போர்ட் 53 ஓட்டங்களையும் டிஜே பிராவோ ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பார்படோஸ் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், ஒசேன் தோமஸ் 3 விக்கெட்டுகளையும் மொஹமட் ஆமிர் மற்றும் ஜேஸன் ஹோல்டர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 176 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பார்படோஸ் றோயல்ஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 154 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் சென்.கிட்ஸ்- நெவிஸ் பெட்ரி யோட்ஸ் அணி 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சாய் ஹோப் 44 ஓட்டங்களையும் அசாம் கான் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சென்.கிட்ஸ்- நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணியின் பந்துவீச்சில், செல்டோன் கொட்ரேல் மற்றும் டோமினிக் ட்ரேக்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் பெபியன் அலென் 1 விக்கெட்டினை யும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 53 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட செர்பேன் ருத்தர்போர்ட் தெரிவுசெய்யப்பட்டார்.





# உலக பார்வை



## காபூல் விமான நிலைய தாக்குதல்: உயிரிழப்பு 90 ஆக அதிகரிப்பு

காபூல் விமான நிலையத்தில் அன்று (26) நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளதாக பொது சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

150-க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், காபூல் விமான நிலையத்திற்கு IS பயங்கரவாத அமைப்பின் பிராந்திய கிளை அமைப்பான ISIS-யினால் மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்படக்கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காபூல் விமான நிலையத்தை இலக்கு வைத்து ரொக்கட் தாக்குதல் அல்லது வெடிகுண்டு நிரப்பப்பட்ட வாகனத்தைக் கொண்டு தாக்குதல் நடத்தப்படலாமென அமெரிக்க இராணுவ மத்திய கட்டளையகத்தின் தலைவர் ஜெனரல் Frank McKenzie தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல்கள் தொடர்பில் அமெரிக்க கட்டளைத் தளபதிகள் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தம்மால் முடியுமான தயார்ப்படுத்தல்கள் அனைத்தையும் மேற்கொள்வதாக ஜெனரல் Frank McKenzie தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையிலும் தமது வெளியேற்றலை பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளில் அமெரிக்க படைகள் ஈடுபட்டுள்ளன.

தாக்குதல்களின் பின்னர் ஆப்கான் பிரஜைகளை காபூலிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை வேகப்படுத்தப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

காபூல் விமான நிலையத்திருந்து வழமைபோன்று விமானங்கள் புறப்பட்டுச்செல்வதாக அங்குள்ள அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

## வேல்ஸில் கொவிட் கட்டுப்பாடுகளில் மாற்றங்கள் இருக்காது: முதலமைச்சர்!

வேல்ஸில் கொவிட் கட்டுப்பாடுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இருக்காது என முதலமைச்சர் மார்க் டிரேக்ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

விதிமுறைகளின் சமீபத்திய மதிப்பாய்வில், வேல்ஸில் கொவிட் தொற்று வீதம் கடந்த ஜனவரி மாதத்துக்கு பிறகு மிக அதிகமாக உள்ளது.

இதனிடையே முதலமைச்சர், மக்கள் தங்களையும் மற்றவர்களையும் பாதுகாக்கவும், வைரஸ் பரவுவதை தடுக்க தடுப்பூசி போடவும் மக்களை வலியுறுத்தியுள்ளார்.

இந்த முறை எந்த மாற்றத்தையும் எதிர்பார்க்கவில்லை என்று டோரிஸ் கூறியது. தேவைப்பட்டால் மூன்றாவது அளவு தடுப்பூசி அளவுகளுக்கு உறுதிப்படுத்தல் திட்டங்கள் தயாராக இருக்க வேண்டும் என்று பிளாய்ட் சிம்ரு தெரிவித்துள்ளார்.

அடுத்த மதிப்பாய்வு செப்டம்பர் 16ஆம் திகதி நடைபெறும். மேலும் சில அபாய அமைப்புகளை உள்ளிடுவதற்கு மக்கள் தடுப்பூசி சான்றை காட்ட வேண்டும் என்பதை வேல்ஸ் அரசாங்கம் தொடர்ந்து பரிசீலிக்கும்.

## காபூலில் தலிபான்களுடன் சீனா முதல்முறையாக பேச்சுவார்த்தை!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தலிபான்களுடன் சீனா முதல்முறையாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் கூறுகையில், 'தலிபான்களுடன் முதல்முறையாக தூதரகத் தொடர்பை ஏற்படுத்தியுள்ளோம். அவர்களுடன் எந்தவித தடையுமில்லாமல் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

இரு தரப்பிலும் தகவல்களும் ஆலோசனைகளும் பரிமாறிக்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியமான விவகாரங்களில் இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு காபூல் நகரம் முக்கிய தளமாகத் திகழ்கிறது.

ஆப்கான் மக்களின் உணர்வுகளையும் சுதந்திரத்தையும் சீனா மதிக்கிறது. அந்த நாட்டின் எதிர்காலம் குறித்து அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்பதில் சீனா உறுதியுடன் உள்ளது' என கூறினார்.


ஆப்கானுக்கு 20 ஆண்டுகளாக அமெரிக்கா நிதியுதவி அளித்து வந்தது. தற்போது தலிபான்கள் கட்டுப்பாட்டில் அந்நாடு வந்துள்ளதையடுத்து, நிதியுதவிக்காக தலிபான்கள் சீனாவையும், பாகிஸ்தானையும் அணுகக்கூடும் என ஆப்கான் மத்திய வங்கித் தலைவர் தெரிவித்திருந்ததற்கு மத்தியில் இந்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானை மீண்டும் கைப்பற்றியுள்ள தலிபான்கள், சீனாவில் உய்கர் இன முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஜின்ஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த பிரிவினைவாத அமைப்பினருக்கு அடைக்கலம் அளிக்கலாம் என சீனா அச்சம் கொண்டிருந்த நிலையில், இதனை தலிபான்கள் மறுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நைஜீரியாவில் கடத்தப்பட்ட மாணவர்கள் விடுவிப்பு!

நைஜீரியாவில் துப்பாக்கி ஏந்தியவர்களால் கடந்த மே மாதம், இஸ்லாமிய பாடசாலையிலிருந்து கடத்தப்பட்ட பல மாணவர்களை விடுவிக்கப்பட்டுள்ளதாக தலைமை ஆசிரியர் அபுபக்கர் அல்ஹாசன் தெரிவித்துள்ளார். எத்தனை மாணவர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்பதற்கான சரியான எண்ணிக்கையை தன்னால் கொடுக்க முடியவில்லை, ஆனால் மாணவர்கள் யாரும் சிறைபிடிக்கப்படவில்லை' என அவர் மேலும் கூறினார். மாணவர்கள் அவர்களது வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நைஜர் மாநிலம், டெஜினாவில் உள்ள பாடசாலையைச் சேர்ந்த சுமார் 136 மாணவர்கள் கடத்தப்பட்டு பணய தொகை கோரப்பட்டது. இதில் ஜூன் மாதம் 15 மாணவர்கள் தப்பிச் சென்றதாகவும் மேலும் 6 பேர் சிறைப்பிடிக்கப்பட்டபோது இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வட மேற்கு மற்றும் மத்திய நைஜீரியாவை நீண்டகாலமாக பயமுறுத்தி, கொள்ளையடித்தல், கால்நடைகளைத் திருடுவது போன்ற அட்டூழியங்களை செய்யும் உள்நாட்டில் அறியப்பட்ட ஆயுதக் கும்பல் கடந்த ஆண்டு டிசம்பர் முதல் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களை கடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஆப்கானிலிருந்து அகதிகளை வெளியேற்றும் பிரான்ஸின் நடவடிக்கை நிறைவுக்கு வருகின்றது!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலிருந்து தங்கள் நாட்டவர்களையும் பிறரையும் பாதுகாப்பாக வெளியேற்றும் தங்களது பணி நிறைவுப் பெறுவதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை அன்று (வெள்ளிக்கிமை) நிறுத்தப்படும் என பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'வெள்ளிக்கிழமை மாலைக்குள் தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ள காபூலில் இருந்து ஆபத்தில் உள்ள பிரான்ஸ் நாட்டினரையும் ஆப்கானிஸ்தானையும் வெளியேற்றும் நடவடிக்கையை பிரான்ஸ் முழுமையாக முடித்துவிடும்.


வெள்ளிக்கிழமைக்குப் பிறகு காபூல் விமான நிலையத்திலிருந்து மக்களை வெளியேற்றும் பணியை எங்களால் தொடர இயலாது.

நாங்கள் நீண்டநாளைக்கு காபுல் விமான நிலையத்தில் இருந்து அகதிகளை வெளியேற்ற முடியாது' என கூறினார்.

இராணுவம் மற்றும் மீதமுள்ள தூதரக சேவைகள் வெளியேறும்போது, பணியின் முறையான முடிவுக்கு பல மணிநேரங்களுக்கு முன்பு பொதுமக்களை வெளியேற்றுவது முடிவடையும் என்று கூறி, பிரான்ஸ் அதன் செயல்பாட்டை இன்னும் பல மணிநேரங்களுக்கு முடிந்தவரை எல்லாவற்றையும் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரை ஆப்கானிஸ்தானில் இருந்து 2500பேர் தலைநகர் பரிஸிக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலர் காபுல் நகரை தலிபான்கள் கைப்பற்றும் முன்னர் அழைத்து வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தென் அமெரிக்காவின் ஆபத்தான ஒரு அதிசய உலகம்

தென் அமெரிக்காவின் ஆபத்தான ஒரு அதிசய உலகம் அமேசன் காடு. சூரிய வெளிச்சமே காணாத தரையும் வருடமெல்லாம் மழையை கண்ட நிலமும் இந்த அமேசன் காடு. இது பிரேசில், கொலம்பியா, வெனிசுலா உட்பட 8 நாடுகளை எல்லைகளாகக் கொண்டது. பூமியில் உள்ள மொத்த பிராண வாயுவில் 20% இங்குதான் உற்பத்தியாகிறது.





17 பெரிய ஆறுகளையும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறிய கிளையாறுகளையும் கொண்ட மிகப்பெரிய நதி அமேசன் நதி. இங்கு 25 லட்சம் வகையான பூச்சி இனங்களும், ஆயிரக்கணக்கான தாவர இனங்களும் ஏறத்தாள 2000 வகையான பறவைகளும் பாலூட்டிகளும் இங்கு வாழுகின்றன. உலகிலுள்ள உயிரினங்களில் மூன்றில் ஒரு பகுதி இங்கு வசிக்கின்றன.

பிரேசில் நாட்டில் தொடங்கிய இந்த காடு ரஷ்யாவுக்கு அடுத்த இரண்டாவது பெரிய காடாகும். 4 கோடியே 77 லட்சத்தி 69 ஆயிரம் சதுர மீட்டர்கள் கொண்டது இந்த காடு. அமோசன் பிரதான ஆறு நாலாயிரத்து 80 மையில் நீளமானது. அதன் வடிகால் 27 லட்சத்தி 22 ஆயிரம் சதுர மைல்களை உள்ளடக்கியது. 28 பில்லியன் கலங்கள் நீர் ஒவ்வொரு நிமிடமும் அட்லாண்டிக் சமுத்திரத்தில் பாய்கிறது. இது 12 வருடங்கள் நியூயோர்க் நகரம் பாவிக்கும் நீரின் அளவாகும். இதனால் அங்கு உப்பு நீர் அடர்த்தி குறைந்து நன்னீரின் அடர்த்தி உயர்ந்து காணப்படுகிறது. இந்தக் காடும் இந்த நதியின் ஆயுளும் கிட்டத்தட்ட 5.5 கோடி வருடங்கள் ஆகும். உலகிலுள்ள ஒரு கோடிக்கு மேலான உயிரினங்களில் அதாவது தாவரங்கள், விலங்குகள், பூச்சிகள் போன்றவைகளில் 50 லட்சத்துக்கு மேல் இங்கு வாழ்கின்றது. 3000 வகையான மீன்கள், 1500 வகையான பறவைகள், 1800 வகையான வண்ணத்துப் பூச்சிகள், 200 வகையான கொசுக்கள் இங்கு வாழுகின்றன.



அதேநேரம் 3000 பழவகைகள் இங்கு கிடைக்கின்றன. அதில் 200 வகையான பழங்கள் மட்டுமே எமக்கு கிடைக்கின்றன. ஏனையவைகள் அடர்ந்த பயங்கரகாடுகள். மிகவும் மோசமான விலங்குகள் வாழ்வதால் அதை மனிதனால் கொண்டுவர முடிவதில்லை. ஆனால் அங்கு வாழும் பழங்குடியினர் 2000 பழவகைகளை உண்டு வாழ்கின்றார்கள். இந்த மக்கள் விலங்குகளை பச்சையாக உண்ணுகிறார்கள் இவர்களுக்கு தீயில் சுட்டு உண்ணும் பழக்கம் தெரியாது. மேலும் இந்தப் பழங்குடியினர் 20.000 ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வருகின்றனர். கி பி 1500 இல் 6.90 லட்சம் பழங்குடியினர் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இப்போது வெறும் 2.5 இலட்சம் பேர்கள் தான் உள்ளனர். 215 குழுக்களாக வாழும் இவர்கள் 170 வகையான மொழிகளைப் பேசுகின்றார்கள். இதேபோல் இங்கு மனிதனால் கண்டுபிடிக்க முடியாத ஆயிரக்கணக்கான மர்மங்கள் இன்னும் நிறைய உண்டு.

ஆய்வுகள் செய்ய நடுக் காட்டில் விமானங்கள் மூலம் இறங்க முயற்சி செய்யும் போது ஏதோ பெரிய வகையான பறவைகள் தம்மை தாக்க வருவதாக நினைத்து விமானங்களை தாக்க முற்படுகின்றார்கள். வெளி உலகமே தெரியாமல் இயற்கையோடு இணைந்து வாழும் இவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமானாலும் சாதாரண தடிமல், காய்ச்சலினால் மரணிக்கின்றார்கள்.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 29.08.2021 அன்று வெளியிடப்பட்டது.